
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, SEPTEMBER 16, 2022

வெள்ளிக்கிழமை 16, செப்டெம்பர் 2022 | ஒளி: 08 கதிர் 101 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## கொரோனா இன்னும் முடிவுக்கு வரவில்லை

### உலக நாடுகளுக்கு வலியுறுத்தல்

கொரோனாவின் எதிர்கால வைரஸ் திரிபுகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் விழிப்புணர்வைத் தக்க வைத்துக் கொள்ளுமாறும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் உலக நாடுகளை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை




நாட்டிலுள்ள அரச மற்றும் அரச அங்கிகாரம் பெற்ற அனைத்து பாடசாலைகளுக்கும் எதிர்வரும் திங்கட்கிழமை (19) விசேட விடுமுறை வழங்குவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2




சர்வதேச சமூகமே

# நேரத்தை வீணடிக்காதீர்

### ஜெனிவாவில் தமிழர் தரப்பு தெரிவிப்பு

**உள்ளக விசாரணைகள் மீதோ அல்லது உள்ளக பொறிமுறைகள் மீதோ நம்பிக்கை இல்லை**

**இறுதி யுத்தத்தில் 140க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர்**

இலங்கையில் இடம்பெற்ற போர் குற்றங்கள் குறித்த உள்ளக விசாரணைகள் மீதோ அல்லது உள்ளக பொறிமுறைகள் மீதோ எமக்கு எந்த நம்பிக்கையும் இல்லை, போர் குற்றத்தில் ஈடுபட்ட அனைத்து குற்றவாளிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட வேண்டும் என காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் ஆ.லீலாதேவி ஜெனிவாவில் தெரிவித்துள்ளார். சர்வதேச தரப்பு இனியும் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

## பிரதிவாதிகள் அறுவருக்கு அதிகுற்றப்பத்திரம் பகிர்வு

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதிவாதிகள் அறுவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில், நேற்று (15) அதிகுற்றப்பத்திரம் பகிரப்பட்டது.

கொழும்பு சினமன் கிராண்ட் மற்றும் ஷங்ரில்லா ஆகிய சொகுசு ஹோட்டல்களில் தாக்குதல் நடத்திய மொஹமட் இல்ஹாம் மற்றும் மொஹமட் இன்ஸாப் ஆகியோருடன் தொடர்பு வைத்திருந்த பிரதிவாதிகள் அறுவருக்கே குற்றப்பத்திரம் பகிரப்பட்டது.

சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட அதிகுற்றப்பத்திரம், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில், நேற்றையதினம் பகிரப்பட்டது.

தொடர்ச்சி P2

## தேரர் படுகொலை: பறக்க முயன்ற இளம் தேரர் கைது

சீதுவ, வேத்தேவே பகுதியிலுள்ள விஹாரையொன்றில் 50 வயதான தேரர் படுகொலை செய்யப்பட்டமை சம்பவம் தொடர்பில், டுபாய் நோக்கி பயணிக்கவிருந்த 18 வயதான இளம் தேரர் ஒருவர், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த விஹாரையின் தலைமை தேரரின் சடலம், அவர் தங்கியிருந்த அறையிலிருந்து நேற்று முன்தினம் (14) மாலை மீட்கப்பட்டது.

அறையிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக கிடைத்த தகவலுக்கு அமைய, பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது தேரரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

உயிரிழந்த தேரரின் கண்கள் கட்டப்பட்டு, வாய் துணியால் அடைக்கப்பட்டவாறு துணியால் போர்த்தப்பட்ட நிலையில் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## ஜப்பான் செல்கிறார் ஜனாதிபதி



### கடன் வழங்குநர்களை பேச்சுக்கு அழைக்கவும் கோரிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் தனது முதலாவது வெளிநாட்டு விஜயமாக இம்மாதம் இறுதியில் ஜப்பான் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

ஜெனிவாவில்

## இறுக்கமான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட வேண்டும்

### பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி வழங்குவது அவசியம்



மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களிலிருந்து இலங்கை அரசும், அதன் படைகளும் தப்பிக்க முடியாதவாறு மிகவும் இறுக்கமான தீர்மானமொன்று ஜெனிவாவில் நிறைவேற்றப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வழங்கியே தீர வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

தியாக தீபத்தின்

## நினைவேந்தல் ஆரம்பம்

எம்.றொசாந்த், வி.நிதர்ஷன், டி.விஜித்தா





ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 35வது நினைவு தின நிகழ்வுகள், யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை (15) ஆரம்பமானது.

தொடர்ச்சி P2

## வெலே சுதாவுக்கு எதிரான வழக்கில் திகதி நிர்ணயம்

### கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வெலே சுதா நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்

மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள, வெலே சுதா என்றழைக்கப்படும் கம்பொல விதானகே சமந்த குமார உட்பட மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள பணச்சலவை வழக்கின் சாட்சிய விசாரணைக்கான தினமாக டிசெம்பர் 5ஆம் திகதியை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெதிகே, நேற்று (15) நிர்ணயித்தார்.

170 மில்லியன் ரூபாய் கறுப்புப் பணத்தை பணச்சலவை செய்ததாக வெலே சுதா, அவருடைய மனைவி, அவருடைய தங்கை ஆகியோருக்கு எதிராக பணச் சலவைத் தடுப்புச் சட்டத்தின் கீழ், 57 குற்றச்சாட்டுகளை முன்வைத்து சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2



போராட்டத்தின் மூலம்

## மக்கள் எதிர்பார்த்த மாற்றம் இதுவல்ல

மக்களை ஒடுக்கும் அரசை விரட்டியடித்துவிட்டு ஜனநாயக அரசை ஸ்தாபிப்பதாக மக்கள் முன்னெடுத்த போராட்டத்தின் போதும், நாட்டின் பொருளாதாரக் கொலையாளியான பிரிவினர்களின் தயவில் அவர்களைப் பாதுகாக்கக்கூடிய ஒருவரையே ஜனாதிபதி நாற்காலியில் அமர வைத்துள்ளனர் எனவும், அவர் கூட தற்போது ராஜபக்‌ஷ

தொடர்ச்சி P2

## இலங்கையில் தேர்தல் ஊழல் மிகுந்தது

இலங்கையின் தேர்தல் செயல்முறை பலவீனமானது என்றும் ஊழல் மிகுந்தது என்றும் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா, இவ்வாறு கூறுவது சர்ச்சைக்குரியது என்றாலும் அதை வெளிப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தற்போது பல கட்சிகள் ஆதிக்கம் செலுத்துவதாகவும் பிரதான தலைவர்களின் கருத்தியலுக்கு புறம்பாக செயற்பட முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், வேட்பாளர்கள் தொடர்பான நெறிமுறைகள் சட்டமாக்கப்பட வேண்டும் என்றும் அவை அவர்களின் பதவிக்காலம் முழுவதும் சமமாக செல்லுபடியாக வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அடுத்தவருடம் மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். 2022 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் உறுதிப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவிடமிருந்து


## இலங்கைக்கு புதிய நிதியுதவி கிடையாது

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரமடையத் தொடங்குவதால், இந்த ஆண்டில் இலங்கைக்கு வழங்கப்பட்ட 4 பில்லியன் டொலர்களுக்கு மேலதிகமாக இலங்கைக்கு புதிய நிதி உதவியை வழங்க இந்தியா திட்டமிடவில்லை என இந்தியாவின் அரச உயர் மட்ட வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரொய்டர்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா ஏற்கனவே 3.8 பில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளை வழங்கியுள்ளதாகவும், இதற்கு மேலும் இந்தியா நேரடி உதவிகளை வழங்க முடியாது எனவும்

தொடர்ச்சி P2

## மந்தபோசனத்தால் ஆதிவாசிகளுக்கும் பாதிப்பு



ஆதிவாசிகளின் குடும்பங்களின் பிள்ளைகளும் மந்தபோசன நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக ஆதிவாசிகளின் தலைவர் ஊறுவரிகே வன்னில அத்தோ தெரிவித்துள்ளார். ஆதிவாசி மக்களின் கஷ்டங்கள், தேவைகள் குறித்து கவனம் செலுத்த யாரும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். தமது பிள்ளைகளின் உடல் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், சத்துணவுகள், ஆரோக்கியமான ஆகாரங்கள் இல்லாதமை காரணமாக உடலில் மாற்றங்கள்

தொடர்ச்சி P2

திலீபனின் உருவப்படம் தாங்கிய

## வாகன ஊர்தி பொத்துவிலில்

எஸ்.கார்த்திகேசு






விடுதலைப் புலிகளின் மாவீரன் தீயாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, பொத்துவில் தொடக்கம் யாழ்பாணம் - நல்லூர் கோவில் வரையான திலீபனின் திரு உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தி, பொத்துவில் நகரில் இருந்து நேற்று (15) ஆரம்பமாகி இருந்தன.

இதன் ஆரம்ப நிகழ்வை, பொத்துவில் நகரில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் நேற்றுக் காலை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது தியாக தீபம் திலீபனின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, தீபம் ஏற்றப்பட்டு,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நேரத்தை வீணடிக்காதீர்

இறுதி யுத்தத்தில் பாதுகாப்பு தரப்பிடம் ஒப்படைக்கப்பட்ட தமது பிள்ளைகள், உறவுகள் குறித்து அவர்கள் இன்னமும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். தமது வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில் தமக்கான நாட்களை எண்ணிக்கொண்டுள்ள பெற்றோருக்கு செய்யக்கூடியது இதுவே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தில் 140க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். அவர்களை நாம் இழந்துள்ளோம், இவர்களது உறவினர்கள் இறக்க முன்னர் எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றே நாம் சர்வதேச சமூகத்தை நாடுகிறோம், உண்மைகளை கண்டறிய உள்ளக பொறிமுறை உருவாக்கப்படும் என கூறி பல வருடங்கள் கடந்தும், கலப்பு நீதிமன்றங்களை கூட அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழர் பிரதேசங்களின் சனப்பரம்பலை அழிக்கும் விதமான சிங்கள குடியேற்றங்கள் இடம்பெற்றுக்கொண்டுள்ளன. மறுபுறம் இராணுவ மயமாக்கல் மற்றும் நில அபகரிப்புகள் இன்றுவரை தொடர்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

ஐநா மனித உரிமைகள் பேரவையில் 'ஆயுத மோதலின் போதும் அதற்குப் பின்னரும் இலங்கையில் தமிழர் உரிமைகளுக்கான சர்வதேச சட்டப் பாதுகாப்பின் தோல்வி' என்ற தலைப்பில் ஜெனிவாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

# இறுக்கமான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட வேண்டும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதில் ஆணையாளர் ஆற்றிய உரையை வரவேற்கின்றோம். அதேவேளை, இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த அறிக்கையையும் நாம் வரவேற்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பரிந்துரைகளை இலங்கை அரசு இதுவரை நிறைவேற்றவில்லை. மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசு தொடர்ந்து உதாசீனம் செய்து வருகின்றது எனக் குறிப்பிட்ட அவர்,

அரசியல் தீர்வு சம்பந்தமான பரிந்துரையையும் கூட இலங்கை நடைமுறைப்படுத்தவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னமும் அமுலில்தான் இருக்கின்றது. அதன் கீழ் கைது நடவடிக்கைகள் தொடர்கின்றன. ஐ.நா.வுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் இலங்கை அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்த போதிலும் அவற்றில் எதுவும் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அந்த வாக்குறுதிகளைக் கிடப்பில் போட்டுவிட்டு சர்வதேச சமூகத்தை இதுவரை காலமும் இலங்கை அரசு ஏமாற்றி வந்தது. மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களிலிருந்து இலங்கை அரசும், அதன் படைகளும் தப்பிக்க முடியாதவாறு மிகவும் இறுக்கமான தீர்மானம் இம்முறை ஜெனிவாவில் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வழங்கியே தீர வேண்டும் என்றார்.

# பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை

அன்றையதினத்தில், பிரித்தானியாவின் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச் சடங்கு இடம்பெறவுள்ள நிலையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே அன்றையதினம் துக்க தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், விசேட அரச விடுமுறை தினமாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

19ஆம் திகதியன்று விசேட விடுமுறையாக அறிவிக்கப்பட்டாலும் வங்கி மற்றும் வர்த்தக விடுமுறையாக அறிவிக்கப்படவில்லை என பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 19ஆம் திகதியன்று லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெறும் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்குகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ள உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேரர் படுகொலை: பறக்க முயன்ற இளம் தேரர் கைது

இந்த சம்பவம் குறித்த விசாரணைகளுக்கு அமையவே சந்தேகத்தின் பெயரில் டுபாய்க்கு பயணிக்கவிருந்த 18 வயதான தேரர் ஒருவரே கட்டுநாயக்கவில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

குறித்த விஹாரையிலிருந்த ஜீப் மற்றும் காரொன்றும் காணாமல் போயுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகன ஊர்தி பொத்துவிலில்

பொதுமக்களால் மலர் தூவி திலீபனின் உருவப்படத்துக்கு தமது அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தி, பிரதான வீதி வழியாக திருக்கோவில் நகரை வந்தடைந்தது. அங்கும் பொதுமக்களால் அஞ்சிலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தியாக தீபம் திலீபன் தொடர்பான நினைவுப் பேருரையை நிகழ்த்தினார். இந்த நிகழ்வானது திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்த வாகன பேரணியானது, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஊடாக எதிர்வரும் 26ம் திகதி யாழ்ப்பாணம் - நல்லூர் கோவிலில் நிறைவுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நினைவேந்தல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் தியாகி தீலிபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நேரம் காலை 9.45 மணியளவில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமானது.

மாவீரர்களின் பெற்றோரால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதை தொடர்ந்து, மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

1) மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2) சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3) அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4) ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5) தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

# பிரதிவாதிகள் அறுவருக்கு அதிகுற்றப்பத்திரம் பகிர்வு

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று, கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தொடர் குண்டுவெடிப்பு தாக்குதல் தொடர்பில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஐஎஸ்ஐஎஸ் உடன் தொடர்புடைய உள்ளூர் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான தேசிய தௌஹீத் ஜமாத்தைச் சேர்ந்த ஒன்பது தற்கொலை குண்டுதாரிகள், இலங்கையின் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தன்று நடத்திய தொடர் குண்டுவெடிப்பில் 270 பேர் கொல்லப்பட்டதுடன், 500 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா இன்னும் முடிவுக்கு வரவில்லை

கொரோனா தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உலகம் ஒருபோதும் சிறந்த நிலையில் இருந்ததில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2019 ஆண்டின் இறுதிப்பகுதியில் சீனாவில் தோன்றிய இந்த வைரஸ் காரணமாக உலகளாவிய ரீதியில் கிட்டத்தட்ட 6.5 மில்லியன் மக்கள் உயிரிழந்திருந்தனர்.

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குப் பின்னர், கொரோனா மரணங்கள் மிகவும் குறைவடைந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் கடந்த வாரம் தெரிவித்திருந்தது.

எனினும், கொரோனாவின் எதிர்கால வைரஸ் திரிபுகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் விழிப்புணர்வைத் தக்க வைத்துக் கொள்ளுமாறும் ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம், உலக நாடுகளை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

கடினமாக ஓட வேண்டிய நேரம் இதுவென்றும், தங்களது கடின உழைப்பின் பலனைப் பெறமுடியும் என்று தெரிவித்துள்ள அவர், 100% அதிக ஆபத்துள்ள தரப்பினர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவும் வைரஸுக்கான பரிசோதனையைத் தொடரவும் உலக நாடுகளை வலியுறுத்தினார்.

# வெலே சுதாவுக்கு எதிரான வழக்கில் திகதி நிர்ணயம்

விஜயராம மாவத்தை, ராஜகிரிய, நெதிமால ஆகிய பகுதிகளில் சொகுசு வீடுகள் மற்றும் சொகுசு கார்கள், தங்கநகைகள் ஆகியவையே கறுப்புப் பணத்தில் வாங்கப்பட்டு, பணச்சலவை செய்யப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

நேற்றையதினம் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வெலே சுதா, நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்த நிலையில், அவருடைய மனைவியும் ஆஜராகியிருந்தார்.

2008ஆம் ஆண்டு, கல்கிஸை பிரதேசத்தில் வைத்து, 7.05 கிராம் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்ட வெலே சுதா, ஹெரோய்ன் விற்பனை செய்தமை மற்றும் வைத்திருந்த வழக்கில், குற்றவாளியான இனங்காணப்பட்டு மரணதண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# இலங்கைக்கு புதிய நிதியுதவி கிடையாது

தெரிவித்துள்ள அவ் உயர்மட்டம், தற்போது இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதால் இனிமேல் அவர்கள் ஐ.எம்.எப்புடன் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும் இந்திய அரசாங்க வட்டாரம் தெரிவித்துள்ளதாம். எவ்வாறாயினும், இந்த ஆண்டின் இறுதியில் ஜப்பான், சீனா மற்றும் தென் கொரியாவுடன் இலங்கை நடத்த திட்டமிட்டுள்ள நன்கொடையாளர் மாநாட்டிற்கு இந்தியா பங்கேற்கும் எனவும் அந்நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

# ஜப்பான் செல்கிறார் ஜனாதிபதி

இந்த விஜயத்தின் போது இலங்கையின் கடன் நெருக்கடியை சமாளிக்கும் விதமாக தமது பிரதான இருதரப்பு கடன் வழங்குநர்களான சீனா மற்றும் இந்தியாவுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்க அழைக்குமாறு ஜப்பானுக்கு வலியுறுத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விவகாரங்கள் அவரது நிகழ்ச்சி நிரலில் முதன்மையாக இருக்கும் எனவும், ஜனாதிபதி ரணில், ஜப்பானிய பிரதமரை டோக்கியோவில் சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் முன்னெடுக்கும் நிகழ்வில், தற்போதைய நெருக்கடி மற்றும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான திட்டமிடப்பட்ட சீர்திருத்தங்கள் பற்றிய அண்மைக்கால தீர்மானங்கள் குறித்தும் ஜனாதிபதி முன்வைப்பார். இந்த விஜயம் இம்மாதம் 25 ஆம் திகதி முன்னெடுக்கப்படும் எனவும் செப்டெம்பர் 30ஆம் திகதி அவர் மீண்டும் நாடு திரும்புவார் எனவும், அத்துடன் செப்டெம்பர் 28ஆம் திகதி பலதரப்பு நிதி நிறுவனத்தின் 55வது ஆண்டு கூட்டத்தின் நிகழ்வில் பங்கேற்பார் எனவும் கூறப்படுகின்றது.

# நீரோடையில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

ஆர்.ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெள்ளக் கல்லு மலைப்பகுதியில் உள்ள நீரோடையில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குசலானமலை பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான சித்திரவேல் சிறிகந்தராஜா வயது (58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனது மனைவி மற்றும் மகனின் குடும்பத்துடன் குறித்த வெள்ளக்கல்லு மலைப்பகுதிக்கு மீன் பிடிப்பதற்கும் காட்டில் தேன் எடுப்பதற்காக மூன்று நாட்களுக்கு முன்னர் சென்றிருந்தனர். இந்நிலையில், தனது மனைவியிடம் 2,000 ரூபாய் பணத்தினை பெற்றுக்கொண்டு பிலிப்பியர் சேனை பகுதிக்கு சென்று வருவதாக கூறி நேற்று முன்தினம் (14) சென்றுள்ளார். ஊருக்கு சென்றவர் திரும்பவில்லை என மலையில் எதிர்பார்த்திருந்த குடும்பம். குடும்பத்தினர் தேடிச் சென்றபோதே வெள்ளகல்லு மலைப்பகுதிகளில் நீரோடையில் குறித்த நபர் சடலமாக கிடப்பதை கண்டு பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். திடீர் மரண விசாரணை அதிகாரி உள்ளிட்டவை குறித்த இடத்துக்குச் சென்று மரண பரிசோதனை மேற்கொண்டனர்.பின்னர் சட்ட பரிசோதனைக்காக சடலம் செங்கலடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு பின்னர் உறவினருடன் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# வெளிநாட்டு கஞ்சா செடி வளர்த்தவர் கைது

டிசந்ரு

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்கு ட்பட்ட பிளக்பூல் பகுதியில் கஞ்சா செடி வளர்த்து வந்த ஒருவரை விசேட அதிரடி படையினர் நேற்று (15) மாலை 4 மணியளவில் கைது செய்தனர்.

பிளக்பூல் பகுதியில் அமைந்துள்ள தனிவீடு ஒன்றில் கஞ்சா செடி வளர்க்கப்படுவதாக கிடைத்த ரகசிய தகவலை அடுத்து நுவரெலியா பொலிஸார் மற்றும் விசேட அதிரடி படையினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையிலேயே வெளிநாட்டு கஞ்சா செடி வளர்ப்பில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

இவர்களால் வளர்க்கப்பட்ட 70 தொடக்கம் 77






கஞ்சா செடிகளும் கைப்பற்றப்பட்டுள்ளது

இந்த கஞ்சா செடிகள் அனைத்தும் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டது எனவும் , வீட்டில் மூன்று அறைகளில் வளர்த்து வந்ததாகவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒப்புக்கொண்டார் என பொலிஸார் தெரிவித்தனர்

இந்நிலையில், நுவரெலியா பிளக்பூல் பகுதியில் மேலும் சில இடங்களில் கஞ்சா செடி வளர்க்கப்படுகிறதா என்றக் கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்

## திலீபனின் நினைவேந்தல் வழக்கு;
# பிரதிவாதிகள் விடுதலை: வழக்கும் தள்ளுபடி

விஜயரத்தினம் சரவணன்

கடந்த வருடம் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை மேற்கொண்டதற்காக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம். கே.சிவாஜிலிங்கம், முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர் மரியசுரேஸ் ஈஸ்வரி, சமூகசெயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோருக்கு எதிராக முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன் மன்றில் முன்னிலையாகி தனது சமர்ப்பணங்களைச் செய்திருந்தார்.அவருடைய சமர்ப்பணங்களை வழக்கைத் தள்ளுபடிசெய்திருந்தது .

# மந்தபோசனத்தால் ஆதிவாசிகளுக்கும் பாதிப்பு

ஏற்படுவதாகவும், தமக்கான ஆகாரங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். உரம் பற்றாக்குறை காரணமாகவும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், அவர்களினால் விவசாயம், கிழங்கு உணவுகளை உற்பத்தி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச சமூகத்தை
# தவறான பாதையில் வழிநடத்துகின்றனர்
## சாடுகிறார் சுரேஷ்

■ வி.நிதர்ஷன்



ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும் சர்வதேச சமூகத்தை தவறான பாதையில் வழிநடத்துகின்றனர் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அமெரிக்காவின் யுஎஸ்எய்ட் அமைப்பின் நிர்வாக இயக்குநர் சமந்தா பவர், கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அதேபோல் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கலந்துகொண்டு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

அவர்களது கூற்றுகளுக்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே ஊடக அறிக்கையொன்றை சுரேஷ் க.பிரேமச்சந்திரன், நேற்று (15) வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

‘கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜெனீவாவில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும், சர்வதேச சமூகத்தைத் தவறாக வழிநடத்தும் நோக்கில் பொய்யானதும் பிழையானதுமான கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

சமந்தா பவர், கொழும்பு வந்திருந்த நேரத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழர்களை விடுதலை செய்வதற்கு பொறிமுறை ஒன்று உருவாக்கப்படும் என்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கு துரித தீர்வு காணப்படுமென்றும் உத்தரவாதம் அளித்திருக்கிறார்.

அத்தோடு, விடுவிக்கப்படக்கூடிய காணிகள் குறித்து ஆராயப்படுகின்றது என்றும் வடக்கு மாகாணம் பெரும் பொருளாதார மையமாக மாற்றப்படும் என்றும் ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் என்றும் நீண்ட உத்தரவாதங்களை அளித்திருக்கிறார்.

ஜனாதிபதி நேர்மையாகத்தான் இந்த விடயங்களைக் குறிப்பிட்டிருக்கிறாரா என்பது முதலாவது கேள்வியாக இருக்கின்றது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும்படி உலக நாடுகள் அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய இந்த சமயத்தில், சர்வதேச சமூகத்தை திசை திருப்புவதற்கே இத்தகைய அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன.

இதனை அடியொற்றியே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் ஜெனீவாவில் ‘நாங்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அகற்ற இருக்கிறோம்’ என்று பொய்யான தகவலைக் கூறியிருக்கின்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகளை கபளீகரம் செய்யும் நடவடிக்கைகள் இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. இராணுவம், கடற்படை தொடர்ந்தும் தனிநபர்களுக்குச் சொந்தமான காணிகளை கபளீகரம் செய்து வருகின்றன. யாழ்ப்பாணம், பளை பிரதேசத்தில் இராணுவத்தினர் பண்ணை அமைப்பதற்கென 1,400 ஏக்கர் காணியைக் கோரி இருக்கின்றது.

அத்துடன், ஆயிரக்கணக்கான வருடங்கள் பழைமைவாய்ந்த திருக்கோணேஸ்வரர் கோவிலின் புனிதத்தைக் கலைக்கக்கூடிய விதத்தில், நிரந்தரமான சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி, அந்தப் பிரதேசம் சிங்கள - பௌத்த மக்களுக்குச் சொந்தமானது என்பதை ஸ்தாபிக்கும் நோக்கில், இலங்கை அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

“மன்னார் - திருக்கேதீஸ்வரத்துக்கு முன்னால் ஒரு பௌத்த விகாரை, வவுனியாவில் பழைமைவாய்ந்த வெடுக்குநாரி சிவன் கோவில் பிரதேசத்தில் பலாத்காரமாக பௌத்த விகாரை நிர்மாணம், முல்லைத்தீவில் குருந்தூர்மலையில் நீதிமன்ற தீர்ப்புகளை மீறி சட்டவிரோதமான முறையில் பௌத்த விகாரை நிர்மாணம் போன்ற விடயங்கள் இன்னமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நிலைமை இவ்வாறிருக்க, மேலும் விடுவிக்கக்கூடிய காணிகள் குறித்து ஆராயப்படும் என்று சொல்வது சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதைத் தவிர, வேறென்ன?

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, வடக்கு மாகாணத்தை பெரும் பொருளாதார வர்த்தக மையமாக மாற்றுவோம் என்று கூறுவதானது நகைச்சுவையின் உச்சக்கட்டம்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் உறுப்புநாடுகளை ஏமாற்றுவதற்கும் கொழும்பு வந்துசெல்லும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும் வாய்க்கு வந்தவற்றை அள்ளித்தெளிக்காமல், மேற்கண்ட விடயங்களுக்கு இனியாவது காத்திரமான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ள வேண்டும்’ என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



பாராளுமன்றத்தை
# பொதுமக்கள் பார்வையிட அனுமதி

கொவிட்-19 பெருந்தொற்று சூழல் மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக, பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு இதுவரை விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தொடர்பில், படைக்கல சேவிதரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவால் அனுமதிக்கப்பட்டது.

இதற்கமைய முதற்கட்டமாக பாராளுமன்ற அமர்வு தினங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பாராளுமன்றத்தைப் பார்வையிட விரும்பும் தரப்பினருக்கு அனுமதியை வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது. இதற்கமைய, செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில் பாடசாலை மாணவர்கள் பாராளுமன்ற கட்டடத்தொகுதிக்கு வருகைதர அமர்வு அல்லாத நாள்களில் மு.ப 9.30 மணி முதல் பி.ப 3.00 மணிவரை (விடுமுறை நாள்கள் தவிர்ந்த) அனுமதிக்கப்படுவார்கள் என பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து தெரிவித்தார்.

கடிதம், தொலைநகல் (0112777473/ 0112777335) அல்லது www.parliament.lk என்ற இணையவழியூடாக இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். பல்கலைக்கழகங்களின் மாணவர் குழுக்கள், அரசின் கீழ் பதிவுசெய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளலாம் என படைக்கல சேவிதர் மேலும் தெரிவித்தார்.

பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்தி
# பலமான ஆசியாவை உருவாக்க வேண்டும்

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிசெய்து, உலத்துக்குத் திறந்துவிடுவதன் மூலம் பலம்வாய்ந்த ஆசியாவை உருவாக்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சுதந்திரமான கடற்பயணத்தை உறுதிப்படுத்தி, இலங்கையை கடல்சார் வர்த்தக கேந்திரமாக நிலைநிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் சிறந்ததொரு பாதுகாப்பு முறைமை இல்லை என்றால் எமது எதிர்காலம் பாதிக்கப்படும்; பூகோள அரசியலின் நிலைமை மிகவும் மோசமாகி விடும் எனவும் அது நாட்டுக்கு நல்லதல்ல எனவும் தெரிவித்தார்.



# பாட்டலிக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு தடையுத்தரவு

ராஜகிரியவில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் சாட்சிய விசாரணையை அடுத்த வருடம் மார்ச் 15ஆம் திகதிவரை இடைநிறுத்தி, உயர்நீதிமன்றம், நேற்று (15) இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தது.

மேலும், பிரியந்த ஜயவர்தன, ஏ.எச்.எம்.டி. நவாஸ், அச்சலா வெங்கப்புலி ஆகியோரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம், பாட்டலி எம்.பியின் மேன்முறையீட்டு மனுவை பரிசீலிக்க அனுமதி வழங்கியது.

2016ஆம் ஆண்டு ராஜகிரியவில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க, அவரது சாரதி மற்றும் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


பொய்யான சாட்சியங்களை சோடனை செய்தமை, சதி செய்தமை, பொய்யான அறிக்கைகளை சமர்ப்பித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், முன்னாள் அமைச்சர் சம்பிக்க மற்றும் பிரதிவாதிகள் இருவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டு, வழக்கு விசாரணை இடம்பெற்று வருகிறது.

# இன்று போராட்டம்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, கொழும்பு -மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் கைதிகளுக்கான ஆதரவு போராட்டம் மட்டக்களப்பில் இன்று (17) நடைபெறவுள்ளது. ‘பயங்கரவாத தடை சட்டத்தை ஒழிப்போம்’ என்ற தொனிப்பொருளில் காலை 7.30 மணிமுதல் காந்தி பூங்கா முன்றலில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க, அதிலும் தமிழ் பேசும் மக்கள் மீது கூடுதலாகத் திணிக்கப்படும் இந்தச் சட்டத்துக்கு எதிராக, இந்தப் போராட்டத்தில் அனைவரும் கலந்துகொண்டு, தங்களது ஆதரவை வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அழைப்பு விடுத்துள்ளார்.





மலையக மக்களின் காணி உரிமையில்
# கைவைக்கும் கணக்காய்வு அறிக்கை



பா.நிரோஸ்

மலையக மக்களின் தொடர் போராட்டங்களால் ஓரளவேனும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள காணி உரிமையை முழுமையாகப் பறிக்கும், மலையக மக்களின் எழுச்சியை முழுமையாக முடக்கிப்போடக்கூடிய பல சிபாரிசுகளை அரசாங்கத்தின் கணக்காய்வு அறிக்கையில் காணக்கிடைக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில், மலையக மக்களுக்கென உருவாக்கப்பட்டிருந்த மலைநாட்டுப் புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரத்தின் கீழ் இருந்த மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சால் முன்னெடுக்கப்பட்டிருந்த தனி வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அறிக்கையின் ஆரம்பத்தில் இருந்தே ‘ட்ரஸ்ட்’ என அழைக்கப்படுகிற பெருந்தோட்ட மனிதவள நிதியம் மீதான குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டே போகிற இந்த அறிக்கையில், இறுதியில் இந்நிறுவனத்தை அரசுடமையாக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. வீடமைப்புத் திட்டத்துக்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது தோட்ட முகாமைத்துவமும் பெருந்தோட்ட மனிதவள நிதியமும் வெளிப்படைத்தன்மையின்றி செயற்படுவதோடு, முறையான நடைமுறையைப் பின்பற்றுவதில்லை. இதனால் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, வீடுகளைப் பெறுபவர்கள் செலுத்த வேண்டிய கடனை மீள அறவிடுவதற்கான எந்தவோர் ஆவணங்களையும் ட்ரஸ்ட் கொண்டிருக்கவில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. வீட்டுத் திட்டங்களுக்கு அமைச்சின் ஊடாக, ட்ரஸ்ட்க்கு பணம் வழங்கப்படுகிறது. எனினும், ட்ரஸ்ட்க்கு பணத்தை வழங்குவதற்கான அனுமதி இதுவரையில் திறைச்சேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை எனவும் சுட்டிகாட்டப்படுகிறது.

தரமற்ற மூலப் பொருள்களைப் பயன்படுத்தி வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை, தரமற்ற நிலையில் நிர்மாணிக்கப்பட்டமை உள்ளிட்ட காரணங்களால் வீட்டுத் திட்டங்களைப் பொறுப்பேற்க பயனாளிகள் மறுத்துள்ள சந்தர்ப்பங்களும் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அமைச்சில் இல்லாத ஆவணங்கள்

பயனாளிகளிடமிருந்து கடனை அறவீடு செய்வது, வீடமைப்புத் திட்டத்தின் தொடக்கத்திலிருந்து தற்போதுவரையில் வழங்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் பெயர் விவரங்கள், வீட்டுத் திட்டங்களை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர்கள் தொடர்பான ஆவண தகவல்களை மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு பேணியிருக்க வேண்டும். எனினும் இந்த ஆவணங்கள் அமைச்சிடம் இல்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

## அரசாங்கத்துக்கு சுமை

2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 05ஆம் திகதி வர்த்தமானியின் மூலம் உருவாக்கப்பட்ட இந்த அதிகார சபைக்கு 2020ஆம் ஆண்டு வரையில் 88 இலட்சத்து 35 ஆயிரத்து 16 ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. எனினும் இவ்வளவு பெரிய தொகை செலவு செய்யப்பட்டும் இந்த அதிகார சபையின் ஊடாக எந்தவிதமான செயற்பாடுகளும் நிறைவேற்றப்படவில்லை என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோட்ட அதிகார சபையுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, அமைச்சுக்கு இல்லாத இயலுமை இந்த அதிகார சபைக்கு இல்லை என்பதால், இந்த அதிகார சபையை தோற்றுவித்ததன் மூலம், அரசாங்கத்துக்கு மேலதிக செலவு சுமை ஏற்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர் அல்லாதோருக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படக்கூடாது எனவும், இதனால் தேயிலைப் பயிர்களுக்கான காணிகளுக்குப் பாதிப்பு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை புதிய வீடுகளைப் பெறும் பயனாளிகளின் பழைய லயன் அறைகள் அப்புறப்படுத்தப்படாமையால், அந்தப் பழைய லயன் அறைகளில் தொடர்ந்து பயனாளிகள் வசித்து வருவதும், புதிய வீட்டை வாடகைக்கு வழங்கும் சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவை, கொட்டியாக்கலையில் 184 வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்ததாரர் தெரிவின்போது, குறைந்த விலை மதிப்பீட்டை வழங்கிய ஒப்பந்தக்காரருக்குப் பதிலாக மற்றுமோர் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த 184 வீடுகளில் வெறும் 42 வீடுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தோட்ட பிரதிப் பொது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, 2017ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னர் ஏஞ்சிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான பணிகள் நிறுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் வெறும் 42 வீடுகளை மாத்திரம் நிர்மாணித்தமைக்காக 2 கோடியே 68 இலட்சத்து 30 ஆயிரத்து 910 ரூபாயை (26,830,910) செலுத்தியிருக்க வேண்டும். ஆனால், இத்திட்டத்துக்காக 2018ஆம் வரையில் 4 கோடியே 4 இலட்சத்து 43 ஆயிரத்து 527 ரூபாய் (40,443,527) ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்துக்கு ஒரு கோடியே 36 இலட்சத்து 12 ஆயிரத்து 617 ரூபாய் (13,612,617) நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இது மாத்திரமல்லாது, 184 வீடுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 42 வீடுகளிலும் காணப்பட்ட குறைப்பாடுகள் காரணமாக, அந்த வீடுகளை பயனாளிகள் பொறுப்பேற்கவில்லை. இதனால் இந்தக் குறைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய மேலும் 12 இலட்சத்து 77 ஆயிரத்து 145 ரூபாய் (1,277,145) செலவு செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்த வேலைத்திட்டத்தால் மாத்திரம் அரசாங்கத்துக்கு ஒரு கோடியே 48 இலட்சத்து 89 ஆயிரத்து 762 ரூபாய் (14,889,762) நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வீட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக 6 சதவீத முகாமைத்துவக் கட்டணத்தை ட்ரஸ்ட் அறவிடுகிறது. இதன்படி 2018, 2019ஆம் ஆண்டுகளில் மாத்திரம் அந்நிறுவனத்துக்கு 99 கோடியே 4 இலட்சத்து 32 ஆயிரத்து 176 ரூபாய் (99,432,176) செலுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டமைக்கான அங்கிகாரம் இல்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்டுள்ள சிபாரிசுகள்:

- வீடுகளை நிர்மாணிப்பதற்கு தேயிலை பயிரிடப்படக்கூடிய காணிகளை வழங்கக்கூடாது.
- லயன் வீடுகள் அமைந்த இடத்தில் உள்ள காணிகளைப் பயன்படுத்தி, தனி வீடுகளுக்குப் பதிலாக மாடி வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்.
- தோட்டங்களில் வேலை செய்பவர்களுக்கு மாத்திரம் வீடுகள் வழங்கப்பட வேண்டும். அதுவும் அவர்கள் தோட்டங்களில் சேவையாற்றுகின்ற காலத்துக்கு மாத்திரம் வீடுகள் வழங்க வேண்டும்.
- சேவையிலிருந்து ஓய்வு பெற்ற, ஓய்வு பெற இருக்கின்ற தோட்ட தொழிலாளர்களுக்கு தோட்டங்களுக்கு வெளியில் மாடி வீட்டுத் திட்ட முறைக்குக் கீழ் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க வேண்டும். இதன்போது சிறியளவிலான காணியை வழங்கி கால்நடை வளர்க்க வசதிகளையும் வழங்கினால் இந்த வீடுகளில் குடியிருப்பதை நிராகரிப்பதைக் குறைக்க முடியும்.
- ஒப்பந்தக்காரர்களுக்கு ட்ரஸ்ட் ஊடாகப் பணத்தை செலுத்தாது, அமைச்சு நேரடியாகப் பணத்தை செலுத்த வேண்டும். தோட்ட அதிகாரிகளுடன் தொடர்பைப் பேணுவதற்கு, ஆலோசனை சேவைகள், மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக உதவியை வழங்குவதற்கு மாத்திரம் ட்ரஸ்ட் நிறுவனத்தை ஈடுபடுத்த வேண்டும்.
- வீட்டுத் திட்டங்களுக்கான காணி, நுழைவு வீதிகளை தயார்ப்படுத்துவதற்கு வீட்டுத் திட்டங்களுக்கு செலவு செய்யப்படும் செலவில் ஒரு பகுதியை பயனாளிகளிடமிருந்து அறிவிட வேண்டும்.

நினைவேந்தலில் அரசியல் செய்து

# புனிதத்தை மாசுபடுத்தாதீர்

## மாவீரர்களின் பெற்றோர் சார்பில் கோரிக்கை

எம்.றொசாந்த், வி.நிதர்ஷன்

நினைவேந்தல் நிகழ்வுகளில் கட்சி அரசியலைக் கலந்து, நினைவேந்தலின் புனிதத்தை மாசுபடுத்த வேண்டாமென அனைத்து மாவீரர்களின் பெற்றோர் சார்பிலும் அறிவிலியின் தந்தையான முத்துக்குமார் மனோகர் அறிக்கை ஒன்றின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார்.


தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமான வேளை, அங்கு வந்திருந்த அரசியல் கட்சி ஒன்றைச் சார்ந்தவர்கள், பிற கட்சியினருடன் முரண்பாடுகளை ஏற்படுத்தும் முகமாக செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன், அங்கிருத்தவர்களுடன் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

அது தொடர்பில் அனைத்து மாவீரர்களின் பெற்றோர் சார்பிலும் அறிவிலியின் தந்தை ஊடக அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டு உள்ளதாவது, 'தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் மட்டுமல்ல, எந்த நினைவேந்தல்களிலும் கட்சி அரசியலைக் கலந்து, அவற்றின் புனிதத்தை மாசுபடுத்த வேண்டாம்.

இந்த ஆண்டின் திலீபன் நினைவு ஆரம்ப நிகழ்வு தொடங்கும் முன்னர், பிறிதோர் அணியினரை சாடும் வகையில் சட்டத்தரணி சுகாஷ்




15/09/2022

உரையாற்றியமை எமக்கு வேதனையை உண்டாக்குகிறது.

நேற்று இவர் சார்ந்த கட்சியின் ஏற்பாட்டாளரும் திலீபனை நேரில் கண்டவர்களில் ஒருவருமாகிய பொன் மாஸ்டரிடம் இந்நிகழ்வை பொது நிகழ்வாக நடத்துவதில் உங்களுக்குள்ள சங்கடங்கள் என்னவென்று கேட்டேன். எதுவும் இல்லை என பதிலளித்தார். அது திருப்தி அளித்தது. அந்த நம்பிக்கையை சிதறடிக்கும் விதத்தில் சட்டத்தரணி சுகாஷ் இன்றைய தினம்(15) நடந்து கொண்டார்.

மாவீரர் நாள் நிகழ்வுகளை ஏனைய கட்சிகளைத் தாக்கும் களமாக பயன்படுத்த வேண்டாம் என ஏற்கெனவே அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமாரை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதனை கடைபிடிப்பதாக அவர் என்னிடம் உறுதியளித்தார்.

எனினும், கிளிநொச்சியில் நிகழ்ந்த மாவீரர்களின் பெற்றோருடைய கௌரவிப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சாடியமை பற்றி செய்தி பத்திரிகையில் வெளியான போது மிகவும் வேதனைப்பட்டேன். அவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது என்பதற்காக பொன் மாஸ்டரை சந்தித்து உரையாடினேன்.

எனவே, இவ்வாண்டு திலீபனின் நினைவு நிறைவடையும் வரைக்கும் அரசியலை கலக்காமல் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மன்றாட்டமாக அனைத்து கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறேன். எமது உணர்வுகளை மதிப்பார்கள் என நம்புகிறேன்' என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# முல்லைத்தீவில் வாகன பேரணி

விஜயரத்தினம் சரவணன், சண்முகம் தவசீலன்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரிய 'காங்கேசன்துறை தொடக்கம் ஹம்பாந்தோட்டை வரை' என்னும் நாடு தழுவிய வாகன வழி கையெழுத்துப் போராட்டம், முல்லைத்தீவை நேற்று (15) வந்தடைந்தது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியும், சர்வஜன நீதி அமைப்பும் இணைந்து இக்கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுக்கின்றன.

மல்லாவி, சிவன்கோவிலில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு, இந்தக் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பமானது.

தொடர்ந்து மல்லாவி சிவன்கோவில், மல்லாவி நகர் உள்ளிட்ட இடங்களில் கையெழுத்து சேகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், சந்திரலிங்கம் சுகிர்தன், மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் அமிர்தலிங்கம், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், சமூக ஆர்வலர் தம்பையா யோகேஸ்வரன் உள்ளிட்டவர்களுடன் பெருந்திரளான மக்களும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.



மந்துவில் படுகொலை:

# 23ஆம் ஆண்டு நினைவு

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மந்துவில் சந்தை வளாகத்தில் 1999ஆம் ஆண்டு செம்டெம்பர் 15ஆம் திகதி, இலங்கை விமானப்படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுடைய 23ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு, நேற்று (15) நடைபெற்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நினைவு நிகழ்வை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், இம்முறை அமைதியான முறையில் உயிரிழந்தவர்களை நினைவில் கொண்டுள்ளார்கள்.

குறிப்பிட்ட இடத்தில் பொதுச்சுடரை, உயிரிழந்த உறவுகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஏற்றியதை தொடர்ந்து, மலர்தூவி வணக்கம் செலுத்தினர்.

உயிரிழந்த மக்களின் நினைவு நிகழ்வை மேற்கொள்ள எதிர்காலத்திலும் அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர், பிரதேச சபை உறுப்பினர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொது அமைப்புக்களை சேர்ந்தவர்கள் கலந்துகொண்டதுடன், குடத்தனை வடக்கு உதவும் உறவுகள் அமைப்பால் தாக சாந்தியும் வழங்கிவைக்கப்பட்டது.

சட்ட விரோதமாக


# இந்தியா செல்ல முயற்சி; சிறுவர்கள் உட்பட 8 பேர் கைது

எஸ்.றொசேரியன் லெம்பேட்

சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியா செல்ல முயன்ற சிறுவர்கள் உட்பட 8 பேர் பேசாலை, தலைமன்னார் கடல் பகுதியில் வைத்து கடற்படையினரால் செவ்வாய்க்கிழமை (13) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் விசேட சுற்றிவளைப்பின் போதே, இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, திருகோணமலை, தலைமன்னார் ஆகிய பகுதிகளை



சேர்ந்த 18 வயதுக்கு மேற்பட்ட 3 இளைஞர்களும், பெண்கள் இருவரும், 18 வயதுக்கு குறைவான 3 சிறுவர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள், பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், பேசாலை பொலிஸார் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (14) மாலை ஆஜர்படுத்தினர்.

இதன் போது 18 வயதுக்கு மேற்பட்ட 5 பேரையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீர பிணையிலும், ஏனைய 3 பேரையும் நிபந்தனைகள் இன்றியும் விடுதலை செய்தார்.

தென் எருவில் பற்று பிரதேச சபையின்

# 55ஆவது அமர்வில் வாதப் பிரதிவாதங்கள்

வ.சக்தி

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் 55ஆவது அமர்வு, சபையின் தவிசாளர் ஞா.யோகநாதன் தலைமையில், நேற்று (15) நடைபெற்றது. இதன்போது பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

தனது சொந்த விடயம் காரணமாக சபையின் தவிசாளருக்கு அறிவித்துவிட்டு வெளிநாடு சென்றதாகவும், அதற்கு இடையில் தற்காலிக உப தவிசாளர் ஒருவரை சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்து உள்ளதாகவும், இது சட்டத்துக்கு முரணாணது எனவும் இதனை தான் வன்மையாக கண்டிப்பதாக உப தவிசாளர் திருமதி க.ரஞ்சினி தெரிவித்தார்.

இதனிடையே, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளரை இடமாற்றுவதற்கு ஆர்பாட்டம் மேற்கொள்ள வேண்டுமென மே.வினோராஜ் கருத்தை முன்வைத்தார்.

எனினும், இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தாம் தயார் இல்லை எனவும் அதற்கு ஆதரவு வழங்க முன்வரமாட்டோம் எனவும் உபதவிசாளர் திருமதி க.ரஞ்சினி மற்றும் உறுப்பினர்களான காண்டீபன், இரவீந்திரன் ஆகியோர் தெரிவித்தனர்.

சில உறுப்பினர்கள் கருத்துகள் எதுவும் தெரிவிக்காமல் மௌனம் காத்தனர்.



இதனையடுத்து, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளரை இடம்மாற்றுவது தொடர்பில், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்குப் பதில் கிடைத்ததும் மேற்கொண்டு, அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது.

மேலும், இச் சபைக்குச் சொந்தமான 110 லீற்றர் டீசல் காணாமல் போயுள்ளமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தல் உள்ளிட்ட பல தீர்மானங்கள் இதன்போது எடுக்கப்பட்டன.

# சொந்த காணியை கையளித்த தவிசாளர்

எம்.எஸ்.எம் நூர்தீன்



கிரான்குளம் பிரதேச இளைஞர்களின் நன்மை கருதி, பொது விளையாட்டு மைதானமாக பயன்படுத்துவதற்காக தனது இரண்டு ஏக்கர் காணியை, மண்முனை பற்று பிரதேச சபைத் தவிசாளர் தர்மலிங்கம் தயானந்தன், மண்முனை பிரதேச சபைக்கு நேற்று (15) நன்கொடையாக வழங்கினார்.

மிக நீண்ட நாள் தேவையாக காணப்பட்ட விளையாட்டு மைதான காணி தேவையை இதன்மூலம் மண்முனை பற்று சபை தவிசாளர் தீர்த்து வைத்தார்.

காணி உறுதியை மண்முனை பற்று பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை செயலாளரிடம் வைபவ ரீதியாக கையளித்தார்.

இதன்போது மண்முறை பற்று பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# இலவச பஸ் சேவை ஆரம்பித்து வைப்பு

தீஷான் அஹமட்



திருகோணமலை மாவட்டத்தின் சேருவில பகுதியிலிருந்து சேருநுவர நகரில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கான இலவச தனியார் பஸ் சேவை, நேற்று (15) காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சேருவில ரஜமகா விகாரையின் விகாராதிபதி அலுதெனிய சுபோதி தேரர், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துப் பிரச்சினையை கருத்தில்கொண்டு, இந்த இலவச பஸ் சேவையை மனிதாபிமான அடிப்படையில் செய்து கொடுத்துள்ளமை விசேட அம்சமாகும்.

சேருவில பகுதியில் உயர்தர வகுப்புப் பாடசாலைகள் இல்லை. இதனால் இங்குள்ள பாடசாலை மாணவர்கள் சுமார் 10 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள சேருநுவர பாடசாலைகளுக்குச் செல்வதற்கு அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

குரங்குகளின்

# தொல்லைகளை கட்டுப்படுத்தவும்

## விவசாயிகள் கோரிக்கை

பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டத்தில் குரங்குகளின் தொல்லை காரணமாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் பலவிதமான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இம்மாவட்டத்தின் நாவிதன்வெளி, சம்மாந்துறை, நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனை ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு, காடுகளில் இருந்து கூட்டம் கூட்டமாக வருகைதரும் குரங்குகள், விவசாயிகள் பயிரிட்டுள்ள காய்கறிகள், பழமரங்களுக்கு சேதத்தை விளைவிப்பதுடன், வீடுகளுக்கு மேலாக பாய்ந்து செல்வதால் வீட்டின் ஓடுகளும் உடைகின்றன. மேலும், வீடுகளுக்குள் நுழைந்து சமயலறையிலுள்ள உணவுப் பொருட்களை உண்டு குரங்குகள் நாசப்படுத்துகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், குரங்குகளை சன நடமாட்டம் இல்லாத வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

சம்மாந்துறை பத்திரகாளியம்மன் கோவில்

# வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பம்

வி.ரி. சகாதேவராஜா



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ் குறிச்சி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் மற்றும் தீமிதிப்பு வைபவம் நாளை சனிக்கிழமை (17) கதவு திறத்தலுடன் ஆரம்பமாகிறது.

தொடர்ச்சியாக 10 நாள்கள் திருவிழா இடம்பெற்று, எதிர்வரும் திங்கட்கிழமை (26) தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவடைகிறது.

தினமும் பகல் 12 மணிக்கு மதிய பூஜையும் மாலை 6 மணிக்கு இரவு பூஜையும் இடம்பெறுமென கோவில் பரிபாலன சபை தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

பிரதம பூசகர் குமாரகுலசிங்கம் லோகேஷ் தலைமையில் சடங்குகள் இடம்பெறும். 19ஆம் திகதி, ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் கோவிலில் இருந்து பால்குட பவனி நடைபெறும்.

23ஆம் திகதி வீரகம்பம் வெட்டல் அதனை தொடர்ந்து 25ஆம் திகதி நோன்புக் கட்டல் சடங்கு நடைபெறும்.

26ஆம் திகதி காலை 6 மணிக்கு ஆராதனையும் தீமிதிப்பு வைபவமும் நடைபெற இருப்பதாக ஆலய பரிபாலன சபை தலைவர் மேலும் தெரிவித்தார் .

வழமை போல ஒக்டோபர் 05 ஆம் திகதி கௌரி விரதம் நடைபெறவுள்ளது.

நலன்புரி

# கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பியுங்கள்

எம்.எஸ்.எம். ஹனீபா



அரசங்கத்தால் வழங்கப்பட்டு வருகின்ற நலன்புரி கொடுப்பனவுகளை பெறுவதற்குத் தகுதியானவர்களை தெரிவுசெய்வதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக நலன்புரி சபையால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம். எஸ்.எம் சப்றாஸ், நேற்று (15) தெரிவித்தார்.

சமுர்த்தி, முதியோர், ஊனமுற்றோருக்கான கொடுப்பனவு மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான உதவித் தொகை பெறுவோர் மற்றும் நலன்புரி கொடுப்பனவுகளை எதிர்பார்ப்பவர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமென தெரிவித்தார்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோர் தமது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள எந்தவோர் உத்தியோகத்தர் ஊடாகவும் பிரதேச செயலகங்களுக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

அரசாங்கத்தின் புதிய கொள்கைத் திட்டத்துக்கமைவாக எதிர்காலத்தில் நலன்புரி கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளார்கள். தற்போது அரச கொடுப்பனவுகளைப் பெறும் அனைவரும் இவ் விண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டுமெனவும் சகல விண்ணப்பங்களும் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



தேயிலை ஏற்றுமதியால் கிடைக்கும் அந்நிய செலாவணி

# தடைப்படும் அபாயம் உள்ளது

## என்கிறார் பிரதீபன்

■ சுதத் எச். எம். ஹேவா

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் நாளாந்தம் ஆயிரம் ரூபாயை செலுத்தத் தவறியதன் காரணமாக, அந்தத் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையை கொழும்புக்கு கொண்டு செல்வதை நிறுத்தும் நடவடிக்கைக்கு, இலங்கை சுதந்திர பணியாளர் சங்கம் ஆதரவளிக்கும் என தொழிலாளர் சங்கத்தின் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் ஆயிரம் ரூபாயை வழங்குமாறு, அரசாங்கம் அந்தந்த தோட்டக் கம்பனிகளுக்கு அறிவித்துள்ள போதிலும், சில தோட்டக் கம்பனிகள் நாளாந்த சம்பளமான ஆயிரம் ரூபாயை வழங்குவதில்லை.

எனவே, மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனியைச் சேர்ந்த சில தோட்டத் தொழிலாளர்கள், அந்தத் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையை, தேயிலை ஏலத்திற்கு எடுத்துச் செல்வதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை, இறுதியில் ஏனைய தோட்டக் கம்பனிகளுக்கும் பரவும் அபாயம் உள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால், தேயிலை ஏற்றுமதியால் நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளது. எனவே, இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கத்தின் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

போராட்டத்தை உதாசீனம் செய்தால்

# பின்விளைவுகளுக்கு நிறுவனமே பொறுப்பு

■ எஸ். சதீஸ்

மஸ்கெலிய பெருந்தோட்ட நிறுவனத்துக்கு உட்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கப் போராட்டம் அமைதியான முறையில் நடைபெற்று வருவதாகத் தெரிவித்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ், இதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டால் ஏற்படும் விளைவுகளுக்கு, மஸ்கெலிய பெருந்தோட்ட நிறுவனமே பொறுப்பாகும் என்றார்.



தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவில்லை. வழமையான பணிகளுக்கு இடையூறு விளைவிக்கவில்லை. தொழிற்சாலைகளில் உற்பத்தி வழமையாக நடைபெறுகின்றது. பொதி செய்யும் வேலைகள் கூட தடுக்கப்படவில்லை.

ஆனால், விற்பனைக்காக தேயிலை பொதிகளைக் கொண்டு செல்வதற்கு முன்னர், தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தொழிலாளர்கள் பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு கோருகிறோம்.

இது மிகமிக சாதாரண தொழிற்சங்க நடவடிக்கையாகும். இந்நிலையில் ஹப்புகஸ்தன்ன தோட்டத்தில் பொதி செய்யப்பட்ட தேயிலையை கொழும்புக்குக் கொண்டு செல்ல தோட்ட நிர்வாகம் முற்பட்டிருக்கிறது. இது தோட்டத் தொழிலாளர்களை ஆத்திரமூட்டும் நடவடிக்கையாகும்.

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின் கடும்போக்கு அடக்குமுறைக்கு எதிராக, தோட்டத் தொழிலாளர்கள் அமைதியான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். தற்போதைய நிலையை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு மஸ்கெலிய பெருந்தோட்ட நிறுவனம் பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும் என்றார்.

# பல்கலைக்கழக மாணவர்களிடையே மோதல்

## நால்வருக்கு காயம்

■ சேஹ்ன் செனவிரத்ன

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் காயமடைந்து நால்வர் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளனர்.

இதில் இரண்டு மாணவிகளும் உள்ளடங்குவதாக பேராதனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் பகிடிவதைக்கு ஆதரவான மற்றும் எதிரான இரு மாணவர் குழுக்களிடையே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

சட்டப் பீடத்தில் இரண்டாம் மூன்றாம் வருடங்களில் கல்வி பயிலும் மாணவர்களிடையே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் சிற்றுண்டிச்சாலைக்கு அருகில் இந்த மோதல் சம்பவம் நேற்று முன்தினம்(14) மாலை இடம்பெற்றுள்ளதுடன், 30 பேர் கொண்ட மாணவர்கள் குறித்த நான்கு மாணவர்களையும் தாக்குவதற்கு வருகை தந்துள்ளதாகவும் இவர்கள் பகிடிவதைக்கு ஆதரவான மாணவர்கள் என்றும் தெரிவிக்கபட்டுள்ளது.

# முட்டைப் பெட்டிக்குள் துப்பாக்கி ரவைகள் மீட்பு

■ சேஹ்ன் செனவிரத்ன

கடுகண்ணாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரிமத்தலாவ பிரதேசத்தில் முட்டை விற்பனை செய்யும் சிறிய கடையொன்றில் முட்டைப் பெட்டியில் ரி-56 ரவைகள் இரண்டு கைப்பற்றப்பட்டுள்ளன என கடுகண்ணாவை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடையின் உரிமையாளர் நேற்றுமுன்தினம் (14) பிற்பகல் இந்த இரண்டு துப்பாக்கி ரவைகள் இருப்பதை அவதானித்து, கடுகண்ணாவை பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, பொலிஸார், அவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.

கடைக்கு முட்டை விநியோகம் செய்பவர் ஊடாக மேலதிக விசாரணைகள் நடத்தப்படும் என கடுகண்ணாவை பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயாவில் இருந்து கொழும்புக்கு

# ரயில் மூலம் மரக்கறிகள் விநியோகம்

## ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியாவில் அறுவடை செய்யப்படும் மரக்கறிகள், பழங்கள், பூக்கள் என்பவற்றை நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நானுஓயா ரயில் நிலையத்தில் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டனர்.



இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமிடல் பற்றிய ஆரம்பக் கலந்துரையாடல். நானுஓயா ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் (14) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, நுவரெலியா, கந்தபொல, ராகலை, நானுஓயா போன்ற இடங்களை அண்டிய பகுதிகளில் இருந்து மரக்கறிகளை ரயில் நிலையத்திற்கு கொண்டு வரும் முறைகள், மரக்கறிகளை ரயிலில் அனுப்பும் முறைகள், மரக்கறிகளை பொதி செய்ய வேண்டிய முறை உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும், வேலைநிறுத்தம் போன்ற அவசர நிலைமைளின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய மாற்று நடவடிக்கைகள், இத்திட்டத்தை விரைவில் தொடங்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

திட்டமிடல் கலந்துரையாடல், கள அவதானிப்பு ஆகியவற்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரயில்வே பிரதி பொது முகாமையாளர், "நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மலையகத்திலிருந்து மரக்கறிகளை லொறிகளில் கொண்டு செல்வதற்கு பாரிய தொகை செலவு செய்யப்படுகிறது. இந்த நிலையில் அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் ஒன்றியத்தால் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைய, நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கு பாதுகாப்பாக மரக்கறிகளை கொண்டு செல்ல நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு வாகன செலவை 50 சதவீதம் வரை சேமிக்க முடியும்" என்றார்.



கண்டி மாவட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு

# இந்திய உதவியுடன் 2,500 வீடுகள்

■ மொஹோமட் ஆஸிக்

இந்திய அரசின் உதவியுடன், கண்டி மாவட்டத்தில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்காக 2,500 வீடுகள் நிர்மாணிக்க உள்ளதாக கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தெரிவித்தார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலக பிரிவுகளிலும் அனைத்து தகவல்களும் அடங்கிய தகவல் கோர்வை ஒன்றைத் தயாரிக்கும் பணியை ஆரம்பிப்பதற்காக இக் கலந்துறையாடல் நடைபெற்றது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், இவ்வீடுகள் பெற்றுக்கொள்ள தகுதியானவர்களை தெரிவு செய்வதற்காக இவ்வாறான தகவல் தொகுப்பு மிகவும் அவசியம். இவ்வீடுகள் தகுதியானவர்களுக்கு சென்றடைவதை அதிகாரிகள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அதேபோன்று மாவட்டத்தில் வசிக்கும் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம், குடிநீர் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கும் இத் தகவல் அவசியம் என்றும் மாவட்ட செயலாளர் சந்தன தெதென்னகோன் மேலும் தெரிவித்தார்.

ஹட்டனில் தீபாவளி பண்டிகைக்காக

# தற்காலிக கடைகளை அமைக்க அனுமதி

■ சுதத் எச். எம். ஹேவா

அடுத்த மாதம் கொண்டாடப்படவுள்ள தீபாவளி பண்டிகைக்காக, ஹட்டன் நகரில் தற்காலிக விற்பனை நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ஹட்டன் - டிக்கோயா நகர சபைக்குரிய இடங்களை ஏலம் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன், அடுத்த மாதம் தீபாவளிக்கு தற்காலிக கடைகளை அமைப்பதற்காக ஹட்டன் நட்சத்திர சதுக்க காணி உட்பட மேலும் சில இடங்களை ஏலத்தில் விடுவதற்கு சபை தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் தீபாவளி பண்டிகையின் போது, தற்காலிக கடைகளை அமைக்க இந்த இடங்கள் ஏலத்தில் விடப்படுவது வழமையாகும். இதனால் நகர சபைக்கு கூடுதல் வருமானம் கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

ஆனால், கொரோனா தொற்றுநோய் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் தீபாவளி வர்த்தகத்தை அனுமதிக்க வேண்டாம் என்று நகர சபை முடிவு செய்து தற்காலிக கடைகளை அனுமதிக்கவில்லை, அதன் காரணமாக நகர சபைக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

எனவே, இந்தத் தீபாவளிக் காலத்தில் தற்காலிகக் கடைகளை அமைப்பதற்கான காணிகளை ஏலம் விடுவதன் மூலம், கணிசமான வருமானம் எதிர்பார்க்கப்படுவதாகவும், அந்த வருமானம் அனைத்தும் நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

# நாகபாம்புக்கு அஞ்சும் லக்ஷபான தோட்ட மக்கள்

■ சுதத் எச். எம். ஹேவா

நல்லத்தண்ணி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லக்ஷபான தோட்டத்தின் ஒரு பகுதியில் நாக பாம்பு ஒன்று சுற்றித் திரிவதால், தோட்டத் தொழிலாளர்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

ஏழு அடி நீளமுள்ள நாக பாம்பு, தோட்டத்தில் சுற்றித் திரிவதாகவும், அதனால் தாம் அன்றாட தொழில் செயற்பாடுகளை அச்சத்துடன் முன்னெடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

குளவி, சிறுத்தை என பல்வேறு தொல்லைகளுக்கு உள்ளாகியுள்ள தாம் விஷப் பாம்புகளின் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த நாக பாம்பை பிடித்து, வேறு இடத்திற்கு கொண்டு செல்ல உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.


சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்ந்த

# ஐவர் கைதாகினர்

■ எஸ். சதீஸ்

பொகவந்தலாவை மாவெளி வனப்பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த, ஐந்து சந்தேகநபர்களை பொகவந்தலாவ பொலிஸார் நேற்று (15) பகல் கைதுசெய்துள்ளனர்.

பொகவந்தலாவை பொலிஸாருக்கு கிடைத்த



இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன், மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைபற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இராணிகாடு, ஆல்டி தோட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களென தெரியவந்துள்ளது.

# அஞ்சலி செலுத்தினார்...


இரண்டாவது எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகத்தில் அஞ்சலி செலுத்தியதுடன் இரங்கல் புத்தகத்தில் அனுதாப செய்தியையும் பதிவிட்டுள்ளார்.

மேலும் பிரித்தானிய அரச குடும்பம் மற்றும் பிரித்தானிய மக்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்குமாறு, இலங்கைக்கான பிரித்தானிய தூதர் சாரா ஹல்டனிடம் கேட்டுக்கொண்டார்.




# சிலிண்டர் மோசடியில் இருவர் சிக்கினர்

■ ரஞ்சித் ராஜபக்ஷ




வெற்று எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்த இருவரை நாவலப்பிட்டி பொலிஸார் நேற்று (15) கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நாவலப்பிட்டி கித்துல்கோட்டை, இம்புல்பிட்டிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும், வீட்டில் நடைபெறும் நிகழ்வுக்காக எரிவாயு பெற வேண்டும் எனக் கூறி, அயலவர்களிடம் இருந்து 12.5 கிலோ கிராம், 5 கிலோ கிராம் எடையுள்ள 16 வெற்று எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொண்டு அவற்றை விற்பனை செய்துள்ளனர்.

இதற்கமைய, சிலிண்டர்கள் 10,000 மற்றும் 15,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களுக்கு வெற்று எரிவாயு சிலிண்டர்களை வழங்கிய பிரதேசவாசிகள், நாவலப்பிட்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில், இருவரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் 25-30 வயதுடையவர்கள் எனவும் சந்தேகநபர்கள் இருவரும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும் நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கை தமிழர்களின் கண்ணீரைத் துடைக்கும் இந்தியா

'கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால், கடல் கடந்து வாழும் தமிழர்களின் கண்ணீர்' என்று அறிஞர் அண்ணா எழுதியிருந்தார். அவரது வழியை பின்பற்றும் திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க), கடல் கடந்து வந்து தமிழகத்தில் தஞ்சம் கோரிய இலங்கை தமிழர்களின் கண்ணீரைத் துடைக்கும் வகையில், பல்வேறு செயற்பாடுகளை அவ்வப்போது முன்னெடுத்து வருகின்றது.

இலங்கை, நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் போதெல்லாம், இந்தியா ஓடோடிவந்து உதவிக்கரம் நீட்டிக்கொண்டிருப்பதை எளிதில் மறந்துவிடக்கூடாது. பொருளாதார நெருக்கடியின் போது, மத்திய அரசாங்கத்ததின் உதவிகளுக்கு அப்பால், தமிழகமும் பல்வேறு வகைப்பட்ட உதவிகளை இலங்கைக்கு செய்திருந்தது.

இந்நிலையில்தான், திண்டுக்கல் அருகே, 18 கோடி இந்திய ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 321 தனித்தனி வீடுகளைக் கொண்ட, 'ஒருங்கிணைந்த இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்' தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலினால் திறந்துவைக்கப்பட்டு உள்ளது. இது தமிழகத்துக்கு பெருமை சேர்க்கும் செயற்பாடு என்பது மட்டுமன்றி, 'தொப்புள் கொடி உறவுகள்' மேலும் பின்னிப்பிணைய வழிவகை செய்துள்ளது.

அதுமட்டுமன்றி, இலங்கை தமிழர்களுக்கு பாதுகாப்பானதும் கௌரவமானதும் மேம்படுத்தப்பட்டதுமான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதை, திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம் உறுதி செய்துள்ளது.

தமிழக சட்ட சபையில், 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் 27ஆம் திகதி சட்டப்பேரவையில், முகாம் வாழ் இலங்கை தமிழர் நலன் காக்கும் அறிவிப்பை முதலமைச்சர் மு.க ஸ்டாலின் வெளியிட்டிருந்தார். அறிவிப்பு விடுக்கப்பட்டு 12 மாதங்களில் உண்மையாகியுள்ளது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில், அள்ளிவீசப்படும் வாக்குறுதிகளுக்கு என்ன நடந்திருக்கின்றன என்று அலசினால், பூஜியங்களே பதிலாகும்.

இலங்கை தமிழர் விவகாரத்தில், தமிழக அரசு மட்டுமன்றி, இந்திய மத்திய அரசும் கூடுதல் கரிசனைகளை காண்பித்து வருகின்றன. ஐ.நாவின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51 ஆவது அமர்வில் கூட, "நீண்ட காலமாக நிலுவையாக இருக்குந்துவரும் தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு, இலங்கையால் வாக்குறுதி அளிக்கப்பட்ட தீர்வு விவகாரத்தில், கணிப்பிடக்கூடியளவுக்கு முன்னேற்றங்கள் இல்லாமல் இருக்கிறது" என, இந்தியா கவலையை தெரிவித்துள்ளது.

அத்துடன், "இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவதன் ஊடாகவும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதன் ஊடாகவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டிய அர்ப்பணிப்புகளில் முன்னேற்றம் இல்லை" எனவும் கவலை தெரிவித்துள்ளது.

மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளது. எனினும், ஒன்பது மாகாண சபைகளின் பதவிக்காலமும் காலவதியாகி, மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. "மாகாண சபைகள் வெள்ளை யானை" என தென்னிலங்கையில் கோஷங்கள் எழுப்புவோர் கூட, மாகாண சபைத் தேர்தல்களின் ஊடாக பிரதிநிதியாக தெரிவாகின்றனர்.

இந்திய அரசாங்கம் ஒருபக்கம் அரசியல் ரீதியான அழுத்தங்களை கொடுத்துக்கொண்டு, மறுபுறத்தில் உட்கட்டமைப்பு மாற்றங்கள், நிவாரணங்களை வழங்குதல் போன்ற அணுகுமுறைகளின் ஊடாக, இலங்கை தமிழர்களின் கண்ணீரை துடைத்துக்கொண்டு இருக்கிறது என்பதே உண்மையாகும்.


தமிழ் Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சின்னப் பொருட்களுக்குள்ளும் அதீத சக்தி உண்டு. கண்ணுக்குத் தெரியாத அணு உடைக்கப்பட்டால் மாபெரும்சக்தி உருவாகின்றது; உலகைப் பயமுறுத்துகின்றது.

வைரம், தங்கம், பிளாட்டினம் போன்றவைகளின் பெறுமதி அதிஉயர்ந்தவை. சிறிய நிறையிலும் அவற்றின் பெறுமதி அதிகம்.

ஒருவரின் உருவத்தை வைத்து, அவரிடத்தில் உள்ள திறமையை, ஆளுமையை எவராலும் எடைபோட முடியாது. தரமும் பெறுமதியும் மிகுந்த பெரியோர்கள், அமைதியாகவே வாழ்கின்றார்கள்.

திறமையும் வலிமையும் அற்றவர்கள் ஆரவாரிக்கின்றார்கள். இன்று உலகம் மாறிவிட்டது. எதுவுமே தெரியாதவர்களில் அநேகர் அரசியல்வாதிகளாக இருக்கிறார்கள்.

எதுவுமே தெரியாதவர்களும் தவறுசெய்து வாழ்பவர்களும் ஒழுக்கம் கெட்டவர்களும் திறமை அற்றவர்களும் எந்தப் பதவிக்கும் அருகதை அற்றவர்கள்.

எனினும், இந்த உலகில் பலர், இவர்களையும் நம்புவதுண்டு. இதனாலேயே மக்கள் எதிர்வினைகளையும் துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள்.

இளைய சமூகம் விழிப்புணர்வு பெறல் வேண்டும். எவராலும் சாதனை படைக்க முடியும்; சிறுவர்கள், பெரியவர்கள் என்ற வயது வேறுபாடு கிடையாது. பெற்றோர், பிள்ளைகளுக்கு உந்துகோலாக இருக்க வேண்டும். திறமை எல்லோரிடத்திலும் உண்டு.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### திருகோணமலை நகருக்கு
## மான்கள் வருவதால் விபத்துகள் அதிகரிப்பு

திருகோணமலை, திருக்கோணேஸ்வர் கோவில் வளாகத்தில் இருந்து, நகர்புறத்துக்கு மான்கள் அதிகமாக வருவதால், விபத்துகள் அதிகரிக்கும் வாய்ப்புகள் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

"மான்கள் உண்பதற்கு போதுமான உணவு இல்லாமையாலேயே அவை உணவு தேடி, நகர்பகுதிகளுக்கு அதிகளவில் வருகின்றன. இதனால் வீதி விபத்துகள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, மான்கள் இறக்கும் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

அத்துடன், திருகோணமலை பொதுச் சந்தையில் காலையில் மான்கள் உணவைக் தேடி வருவதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.
இருந்த போதிலும் மான்கள் அங்கும் இங்கும் சுற்றித்திரிந்து பொலித்தீன்களையும் உட்கொண்டு வருகின்றன. எதிர்காலத்தில் மான்களை பாதுகாப்பதற்கு சிறந்த திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எப். முபாரக்



### இலங்கையின்
# பொருளாதார மீட்சி யார் கையில்?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

நாட்டின் பொருளாதாரம் எப்படியாவது மீண்டுவிடும் என்று முழுமையாக நம்புவோர் இருக்கிறார்கள்; பகுதியாக நம்புவோரும் இருக்கிறார்கள். "வாய்ப்பில்லை ராஜா" என்று அடம்பிடிப்போரும் இருக்கிறார்கள்.

ஆனால், இவர்கள் அனைவரும் உடன்படுகின்றதும் எல்லோருக்கும் தெரிந்ததுமான ஒரு விடயம் யாதெனில், இலங்கையின் பொருளாதாரத்தின் மீட்சி, நிச்சயமாக இலங்கையர்களின் கைகளில் இல்லை என்பதாகும். அப்படியாயின், இப்போது எழுகின்ற கேள்வி, அது யார் கைகளில் இருக்கின்றது என்பதாகும்.

இலங்கையின் பொருளாதாரம், தனது தன்னிறைவுச் சுயசார்புத் தன்மையை இழக்கத் தொடங்கியது முதல், அந்நியர் தயவில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. நாட்டின் பொருளாதார மீட்சிக்காக முன்மொழியப்பட்டுள்ள வழிவகைகள் அனைத்தும், அந்நியர் தயவிலும் உலக நிலைவரங்களிலுமே தங்கியுள்ளன. இலங்கையின் இன்றைய பொருளாதாரம் குறித்துப் பேசும் பலரும், பேசத் தயங்குகிற விடயம் இதுவாகும்.

இலங்கை மிகவும் சிக்கலானதும் ஆபத்தானதுமான ஒரு நெருக்கடியில் சிக்குண்டுள்ளது. ஒருபுறம், சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகள்; இன்னொருபுறம், மேற்குலக நாடுகளின் வர்த்தக, மூலோபாய நலன்கள், சீனா, இந்தியா, ஜப்பான் எனப் பல அரங்காடிகளின் களமாக இலங்கை மாறியுள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்சி, தவிர்க்கவியலாமல் உலகப் பொருளாதாரத்தின் வலுவான தன்மையோடு பிணைந்தது. இதற்கு எமது வரலாற்றிலேயே சான்றுகளுண்டு.

உலகசந்தையில் பெற்றோலிய விலை, 1973-74 காலப்பகுதியில் திடீரென நான்கு மடங்கு உயர்ந்ததால், இலங்கையின் பொருளாதாரம் பெரும் நெருக்கடிக்கு உள்ளானது. இதைப் பேசாமல், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சியின் நிர்வாகக் கோளாறுகளாலும் தவறான அயலுறவுக் கொள்கையாலுமே, நாடு பல்வேறு பொருட்களுக்கான தட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுக்க நேர்த்தது எனப் பேசுவோர் உள்ளனர். அன்று, மண்ணெண்ணெய்க்கும் பாணுக்கும் வரிசையில் நின்ற கதைகளையும் அரிசி பஞ்சத்தின் போது, அரிசியைக் கொண்டு செல்லத் தடைகள் இருந்ததையும் நினைவூட்ட அவர்கள் தவறுவதில்லை. சமையல் எரிவாயு, பெற்றோல், டீசல் போன்றவற்றுக்கான இன்றைய வரிசைகளையும் மின்வெட்டையும் பல்வேறு பொருட்களின் தட்டுப்பாடுகளையும் அதனுடன் ஒப்பிட்டுப் பேசுகின்றனர்.

ஸ்ரீமாவின் ஆட்சியின் போது ஏற்பட்ட நெருக்கடிக்கும், இன்றைய நெருக்கடிகளுக்கும் இடையில் பெரும் வேறுபாடு உள்ளது. அரசாங்கத்தின் பாரிய நிர்வாகக் குளறுபடிகளை விட, ஊழலும் வேறு சக்திகளின் தாக்கமுமே இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணங்களாக உள்ளன.

உலகளவில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை எப்படியாயினும், அது எமது கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால், அதையும் கணிப்பில் எடுத்தே பொருளாதார மீட்சிக்கான திட்டமிடல் நடைபெற வேண்டும். ஆனால், சரணாகதிப் பொருளாதாரத்துக்கு வழிவகுத்துள்ள அரசாங்கமும் அதன் இடைக்கால வரவு செலவுத் திட்டமும், சர்வதேச நாணய நிதியத்தின் கைப்பொம்மையாக நாட்டின் பொருளாதாரத் திட்டமிடலை மாற்றியுள்ளன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டதை விட, மோசமான உலகளாவிய பொருளாதார நெருக்கடியை உலகம் விரைவில் சந்திக்கக்கூடும் என்று, ஓகஸ்ட் மாதத்தில் சர்வதேச நாணய நிதியம் எதிர்வுகூறியுள்ளது. எதிர்பார்த்ததை விட, அதிகளவான பணவீக்கத்துடன் - குறிப்பாக, அமெரிக்கா மற்றும் மிகப்பெரிய ஐரோப்பிய பொருளாதாரங்களில் - உலக நிதி நிலைமைகள் இறுக்கமாகி வருகின்றன.

அமெரிக்காவினதும் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் வளர்ச்சி, கணிசமாகக் குறைத்துள்ளது. கொவிட்-19 பெருந்தொற்று நெருக்கடிகளுக்கு மத்தியில், சீனாவின் பொருளாதார மந்தநிலை எதிர்பார்த்ததை விட மோசமாக உள்ளது. உக்ரேன் யுத்தத்தின் எதிர்மறையான விளைவுகள் தொடர்கின்றன.

இதன் விளைவாக, இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில், உலகளாவிய உற்பத்தி சுருங்கியுள்ளது. உணவு, எரிசக்தி என்பவற்றின் விலைகள் மிகவும் மோசமான உயர்வைக் கண்டுள்ளன. ரஷ்யா, ஐரோப்பாவுக்கான எரிவாயு விநியோகத்தை முற்றிலுமாக நிறுத்தலாம் என்பது உட்பட்ட, சில அபாயங்கள் அடுத்த மாதங்களில் இன்னும் பலமடங்காக விலைவாசி உயர்வுக்கு வழிசெய்வதோடு, மிகப் பரவலான உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் சமூக அமைதியின்மையை ஏற்படுத்தும்.

இன்றைய புவிசார் அரசியல், உலகளாவிய வர்த்தகம் மற்றும் ஒத்துழைப்பைத் தடுத்துள்ளது. இந்த நெருக்கடியை அனைவரும் இணைந்து எதிர்கொள்வதற்கான வாய்ப்பை இல்லாமலாக்கி உள்ளது. இதனால் இலங்கை போன்ற நாடுகளே மிக மோசமான விளைவுகளை எதிர்நோக்கும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் மோசமான பொருளாதார வலி சிறிய, அதிக கடன்பட்ட, வளர்ந்து வரும் நாடுகளையே பாதிக்கும். இலங்கை போன்றே வங்குரோத்தாகும் நாடுகளின் பட்டியலில் ஈக்குவடோர், கானா, ஜாம்பியா, எல் சால்வடோர் ஆகியவை அடங்குகின்றன. அதேவேளை, பாகிஸ்தான், துருக்கி போன்ற பெரிய நாடுகள்கூட ஆபத்தில் உள்ளன.

கடந்த கால உலகப் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து, 2022ஐ வேறுபடுத்தும் மற்றொரு விடயம், முக்கிய கடன் வழங்குநராக சீனா இருப்பதும் அது, கடன் மீள்செலுத்துகை குறித்து, வேறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதுமாகும்.

1980களின் உலகளாவிய கடன் நெருக்கடிகளைப் போலன்றி, தற்போதைய கடன் நெருக்கடியின் சமநிலை, இப்போது கணிசமாக வேறுபட்டது. இந்நாடுகளினுடைய சீனக் கடனின் பெரும்பகுதி, சீனாவின் 'ஒரு வார்; ஒரு வழி' உட்கட்டமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது.

பெய்ஜிங்குடன் கடன் நிவாரணம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவது, தனிப்பட்ட நாடுகளுக்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகத்துக்கும் புதியது. பாரம்பரியமாக, சர்வதேச நாணய நிதியம் மற்றும் பணக்கார நாடுகளின் 'பாரிஸ் கிளப்' என்று அழைக்கப்படுபவை, துன்பகரமான கடனை மறுசீரமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளன.

ஆனால், இதுவரை பெய்ஜிங் தன்னிடம் கடன் வாங்குபவர்களுடன் தனிப்பட்ட ரீதியல் பேசவும், கடன் மீள்செலுத்துகை தொடர்பான, சொந்தமான செயற்பாட்டை விரும்புகிறது. இது சர்வதேச நாணய நிதியத்தினதும் மேற்குலக நாடுகளினதும் அபிலாஷைகளுக்குக் குறுக்காக நிற்கிறது.

இன்று, ஐரோப்பா எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை, வேகமாக அதிகரிக்கும் மின்சாரத்தின் விலைகள் ஆகும். கடந்த வார இறுதியில், செக் குடியரசின் தலைநகரான பிராக்கில் உள்ள வென்செஸ்லாஸ் சதுக்கத்தில், ஏறக்குறைய 70,000 பேர் கூடி, எரிசக்தி கட்டணங்களை உயர்த்துவதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். இது, ஒரு தொடக்கம் மட்டுமே; ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவும்.

ஜேர்மன், பிரெஞ்சு, ஃபின்னிஷ் அரசாங்கங்கள், ஏற்கெனவே உள்நாட்டு மின் நிறுவனங்கள் வங்குரோத்தாவதில் இருந்து காப்பாற்ற முன்வந்துள்ளன. சமீபத்திய நாள்களில், ஜேர்மனி, ஸ்வீடன், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் அனைத்தும் குடும்பங்கள், வணிகங்கள் என்பவற்றின் மீதான அழுத்தத்தைக் குறைக்க, ரேஷன் மற்றும் பாதுகாப்புத் திட்டங்களுடன் சேர்ந்து பில்லியன் டொலருக்கு மேலான நிவாரணத் திட்டங்களை அறிவித்தன.

இந்நாடுகளின் அரசாங்க கடன் அளவுகள், ஏற்கெனவே திகைப்புடன் இருக்கும் நேரத்தில், இவ்வகையான நடவடிக்கைகளுக்கு நாடுகள் அதிக விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும். இதனாலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆபத்தான உயர் கடன் பற்றிய கவலையை, இந்த வாரம் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டது.

மோசமாகக் குறைவடைந்துள்ள வருமானம், வருமான இழப்பு, பெருகிவரும் சமத்துவமின்மை, சமூகப் பதட்டங்கள் அதிகரிக்கும் அபாயம் என்பன, உடைந்துபோன சமுதாயத்துக்கு மட்டுமல்ல, உடைந்த உலகத்துக்கும் வழிவகுக்கும். 1970களில் இருந்து இதுபோன்ற எதையும் உலகம் எதிர்கொள்ளவில்லை.

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், இப்போது உருவாகும் நெருக்கடியானது விரைவில் முடிவடையாது. வரலாற்றில் மிகப் பெரிய வளர்ச்சிப் பேரழிவை நாம் எதிர்நோக்கியுள்ளோம். முன்பு நடந்ததை விட, அதிகமான மக்கள் மிகவிரைவாக, மோசமான வறுமையின் பிடிக்குள் தள்ளப்படுவார்கள்.

உலகப் பொருளாதாரத்துக்கு இது மிகவும் ஆபத்தான நேரம். இது இயல்பாகவோ அல்லது உக்ரேனிய யுத்தத்தாலோ ஏற்பட்டதல்ல. மாறாக, மக்கள் தங்களுக்கு தாங்களே உருவாக்கிக் கொண்டது. இந்த உண்மை சொல்லப்படுவதில்லை.

எல்லாவற்றுக்கும் உக்ரேன் போரே காரணம் என்ற தோற்ற மயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இன்றைய மின்சாரப் பற்றாக்குறையின் வேர், உக்ரேன் போருக்கு முந்தையது. 2020ஆம் ஆண்டில், தொற்றுநோய் கட்டுப்பாடுகளிலிருந்து நாடுகள் வெளிவரத் தொடங்கியதால், பொருட்களின் விலைகள் உயரத் தொடங்கின. அமெரிக்காவில் மட்டும், வாடிக்கையாளர்கள் எதிர்பார்த்ததை விட, ஒரு ரில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கூடுதல் பொருட்களை வாங்குகிறார்கள். இது திடீரென சக்தியின் தேவையை அதிகரித்தது.

இலங்கையின் பொருளாதார மீட்சி, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையிலும், ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதியிலும் தங்கியுள்ளது. இன்னொருபுறம் சர்வதேச சந்தையில் பொருட்களை நியாய விலையில் பெற்றுக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டது. இவ்விரண்டுக்குமான சாத்தியக்கூறுகள் இல்லை என்பது வெளிப்டையாகத் தெரிகிறது. புதிய களங்கள் திறக்கின்றன; நெருக்கடிகள் அதிகரிக்கின்றன.

# தீர்த்தம் காணும் வெருகலம்பதியான்



'கவியருவி'
ஈச்சிலம்பற்று
மதிபாலசிங்கம்

(வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய முன்னாள் முதன்மைக் கங்காணம்)



திருகோணமலை மாவட்டத்தின் தெற்கு எல்லையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடதிசை அந்தத்திலும், வருடம் தோறும் வற்றாது ஓடிக்கொண்டிருக்கும் மகாவலி கங்கையின் கரையருகே அமைந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்கதும் தொன்மை வாய்ந்ததுமான ஆலயமே வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயமாகும்.

14ஆம் நூற்றாண்டில் தென்இந்தியாவிலுள்ள திருநெல்வேலியில் வசித்து வந்த நல்லைநாதச் செட்டியார், தொழுநோயால் துன்புற்றிருந்தவேளை, அனைத்துக் கோவில்களுக்கும் சென்று வழிபாடு செய்த போதிலும் நோய் குணமடையாததால், தென்இலங்கையிலுள்ள கதிர்காமம் சென்று வழிபட்டு தனது நோயைக் குணப்படுத்த விரும்பி, இந்தியாவிலிருந்து இலங்கையின் கிழக்குக் கரையிலுள்ள கொட்டியாபுரத்தில் வந்திறங்கி, வெருகலை வத்தடைந்தார்.

கால்நடையாக தலயாத்திரை மேற்கொண்டு, வெருகலை அடையும்போது மாலையாகிவிட்டது. உடல் சோர்வுற்று இருந்தமையால், தனது கதிர்காமம் நோக்கிய பயணத்தைத் தொடர முடியாது, வேல் இருந்த ஆலமரத்தின் கீழ், இரவுப் பொழுதைக் கழிக்கவேண்டிய நிலை செட்டியாருக்கு ஏற்பட்டது. அன்றிரவு செட்டியார் ஆழ்ந்து உறங்கும்போது, முருகப்பெருமான் அவரின் கனவில் தோன்றி, "அப்பனே நீ தொழு நோயால் துன்புற்று இருக்கின்றாய்; அதையும் பாராமல், கதிர்காமம் வந்து என்னைப் பார்த்திடத் துணிந்தாய். கதிர்காமம் வெகு தொலைவில் உள்ளதால், நீ கஷ்டப்பட்டு, அங்கு யாத்திரை வரவேண்டாம்; வெருகற்பதிதான் கதிர்காமம்" எனக் கூறி மறைந்தார்.

நல்லைநாதச் செட்டியார் எழுந்து பார்த்தபோது, தனது தொழுநோய் நீங்கியமை கண்டு வியப்படைந்து, பெருமானின் அருளை நினைத்துக் கண்ணீர் மல்கினார். மறுநாள், அதேஇடத்தில் செட்டியார் படுத்துறங்கும்போது, மீண்டும் முருகப்பெருமான் கனவில் தோன்றி, "இவ்விடத்தில் எனக்கான ஒரு கோவிலைக் கட்டி, 'சித்திரவேலாயுதர்' என்ற பெயரில் என்னை வழிபடுவாயாக" எனப் பணித்தார்.

கோவில் கட்டுவதற்குத் தன்னிடம் பணம், பொருள் இல்லையே என மனம் வருந்தியபோது, மீண்டும் முருகப்பெருமான் செட்டியாரின் கனவில் தோன்றி, "இங்கிருந்து ஏழு மைல்களுக்கு அப்பால், அரிப்பு என்னும் இடத்தில் குவிந்து கிடக்கும் தங்கக் கிடாரங்களில் ஒன்றை எடுத்து வந்து, கோவில் திருப்பணியை முடிக்கக் கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

செட்டியாரும் அரிப்பு எனும் இடத்துக்குச் சென்று, குறிப்பிட்ட தங்கக் கிடாரங்களில் ஒன்றை எடுத்து வந்து, தற்போது இருக்கும் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தைக் கட்டி முடித்து, அதற்கான குடமுழுக்கையும் செய்வித்தார்.

கண்டிய மன்னனிடம் சென்று, எம்பெருமானுக்கு வேண்டிய மாணிக்கங்களையும் வயல் நிலங்களையும் பெற்றுக் கொடுத்து, ஆலயத்தின் கிரியைகள் அனைத்தும் சிறப்பாக நிறைவேற வழிசெய்தார். இந்த வரலாற்றை, இவ்வாலயத்தின் பதிவுகளிலிருந்து எம்மால் அறிய முடிகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ஆதாரம்: மஹா கும்பாபிசேக சிறப்பு மலர் -1999)

வேண்டி வருவோர்க்கு வேண்டும் வரங்களை வாரி வழங்கும் வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமானின் சர்வ மங்களம் பொருந்திய சுபகிருது வருடத்திற்கான மஹோற்சவம், ஆவணி உத்தர நட்சத்திரம் கூடிய 29.08.2022 திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 18 நாள்கள் விழா நடைபெற்று, இன்று (16.09.2022) தீர்த்தோற்சவம் நடைபெற்று, விழாக்கள் நிறைவடைய உள்ளன.

கடந்த 18 நாள்களும் எம்பெருமானின் அருள் மழையில் நனைவதற்காக, நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வெருகலூர் முருகனின் நல்லடியார்கள் வந்து, சென்று கொண்டிருந்தமை ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமானின் அருளாட்சியின் மகிமையை வெளிக்காட்டி நிற்கின்றது.

இவ்வாலயத்தில், 18 விழாக்கள் நடைபெற்ற போதிலும், அவற்றில் சிறப்புப் பெறும் விழாக்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, ஒன்பதாம் நாள் விழாவின்போது, வெகு தொலைவிலிருந்து நூற்றுக் கணக்கான காவடிகளைச் சுமந்து, அடியார்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

**கோவில் கட்டுவதற்குத் தன்னிடம் பணம், பொருள் இல்லையே என மனம் வருந்தியபோது, மீண்டும் முருகப்பெருமான் செட்டியாரின் கனவில் தோன்றி, "இங்கிருந்து ஏழு மைல்களுக்கு அப்பால், அரிப்பு என்னும் இடத்தில் குவிந்து கிடக்கும் தங்கக் கிடாரங்களில் ஒன்றை எடுத்து வந்து, கோவில் திருப்பணியை முடிக்கக் கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார்**

மற்றும், ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமானுக்கு ஆகம முறையிலமைந்த ஆலயமும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் இராஜ கோபுரமும் அமைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கதிர்காம சுவாமிக்கான ஆலயமும் மடாலய அமைப்பில் அமைக்கப்பட்டு உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். அதனால்தான், வெருகலூர் அமர்ந்த பெருமானின் ஆலயத்தை 'சின்னக் கதிர்காமம்' எனப் பக்தர்கள் போற்றி வருகின்றனர்.

மேலும், 13ஆம் நாள் உற்சவ தினத்திலேயே கதிர்காம சுவாமி வீதியுலா வரத்தொடங்குவது மரபாகும். விழா தொடங்கி, ஆறு நாள்கள் மாத்தரமே, கதிர்காம சுவாமி வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பது வழமையாகும்.

இங்கு, காவடி தூக்கி நேர்த்திகள் நிறைவேற்றும் அடியார்களை அதிகளவில் காணமுடியும். ஒன்பதாம் விழாத் தொடக்கம், இறுதி 18ஆம் நாள் விழா வரை, காவடி நேர்த்திகள் நடைபெறுவதுண்டு.

இது மட்டுமல்லாது, உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் காளைகளுக்கும் காவடி எடுத்து, நேர்த்திகள் நிறைவேற்றுவது இப்பிரதேச மக்களின் பண்பாடாகும். தமது காளைகள் நீண்ட காலம் உடல் ஆரோக்கியத்துடன் தொழிலுக்கு உதவ வேண்டுமென்ற நோக்கத்தோடு, இப்பண்பாடு கடைப்பிடிக்கப்படுவது வழமையாகும். காளைகளுக்கு காவடி எடுத்தல், சிந்து நாட்டு மக்களின் மரபென்பதும் குறிப்பிடத்தக்கது.

வெருகல் மலையில், முருகப் பெருமானுக்குரிய மாம்பழத் திருவிழா, 17ஆம் விழாவன்று மாலை வெகு சிறப்பாக நடைபெறுவதுண்டு. இம் மாம்பழத் திருவிழாவில், பலநூறு அடியார்கள் கலந்துகொண்டு அருளைப் பெறுவது கண்கொள்ளாக் காட்சி எனலாம். 18ஆம் நாள் மாலை, வேட்டைத் திருவிழாவும் தொடர்ந்து தூது பேசுதல் நிகழ்வும் சிறப்பாக நடைபெறும்.

தீர்த்தோற்சவ நாளான இன்று அதிகாலை ஐந்து மணிக்கு புனிதம் நிறைந்த தீமிப்பு நிகழ்வு இடம்பெற்று, காலை எட்டு மணிக்கு அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமான், புனித மகாவலி கங்கைக் கரைக்கு எழுந்தருளி, கங்கையில் தீர்த்தமாடி, பேரன்போடு வழிபட்ட தனது அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

# நெல் உற்பத்தியை அதிகரிக்க 40 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் (FAO) ஊடாக இலங்கையில் விவசாயத்தை வலுப்படுத்துவதற்கு, மேலதிகமாக 40 மில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவகத்தின் (USAID) ஊடாக அமெரிக்கா அறிவித்துள்ளது. காங்கிரஸின் அனுமதி வழங்கலுக்கு அமைய, இந்தப் புதிய நிதியானது, இந்த வருடத்தில் FAOஇன் ஊடாக இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட USAIDஇன் நிதி 46 மில்லியன் அமெரிக்க டொலராகும். எதிர்வரும் பாரிய பயிர்ச்செய்கை பருவமான 2022-2023 பெரும்போகத்தினை (ஒக்டோபர்-மார்ச்) மற்றும் அதன் தொடர்ச்சியான 2023 யால போகத்தினை (ஏப்ரல்-ஒகஸ்ட்) இந்த நிதி பிரதானமாக இலக்கு வைத்துள்ளது. நெல் உற்பத்தியை அதிகரித்து, நீடித்த உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு அத்தியாவசிய உரங்களை மற்றும் பணப்பரிமாற்றங்களை வழங்குவதற்கு அது வழங்கப்படும்.



விவசாயிகள் மற்றும் FAO பிரதிநிதிகளுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது USAIDஇன் நிர்வாகி சமந்தா பவரால் இந்த நிதியுதவி அறிவிக்கப்பட்டது. "இன்று இந்த விவசாயிகளுடன் உரையாடியதில் இருந்தும், அவர்களுடைய தேவைகளை கேட்டறிந்ததில் இருந்தும், அமெரிக்க மக்களிடம் இருந்து இலங்கைக்கு உதவியாக மேலதிகமாக 40 மில்லியன் அமெரிக்க டொலரை நான் அறிவிக்கின்றேன். USAID ஊடாக, அடுத்த பயிர்ச்செய்கை போகம் ஆரம்பிக்கவுள்ள நேரத்தில் ஒரு மில்லியன் உள்நாட்டு விவசாயிகள் உரங்கள் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான பொருட்களை பெறுவதற்கு இந்த நிதி உதவும்" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

டிரிப்பல் சுப்பர் பொஸ்பேட் (TSP) உர விநியோகம் ஊடாக விவசாயிகளின் நெல் உற்பத்தி இயலுமையை வலுப்படுத்துவதற்கு நிதியினை FAO பயன்படுத்தும். நாட்டில் கடந்த இரண்டு பயிர்ச்செய்கை போகத்தின் போதும் கிடைக்கப் பெறாத TSP ஆனது, அடுத்து வரும் விவசாய போகங்களில் இலங்கை மக்களுக்கு உணவூட்டுவதனை உறுதி செய்வதற்கு, அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்படும்.

TSPஇற்கு மேலதிகமாக, உலர் மற்றும் இடை வலயங்களில் மிகவும் வறிய மாவட்டங்களில் இருந்து 1 ஹெக்டேயர் (2.5 ஏக்கர்) வரை வயல்நிலங்களைக் கொண்டுள்ள 186,000 சிறு விவசாயிகளுக்கு தலா 50 கிலோ கிராம் யூரியா வழங்கப்படும். சுயநுகர்வுக்காக நெல் பயிரிடும், கிராமப் புறங்களைச் சேர்ந்த எளிதில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடியவர்களாக சிறு விவசாயிகள் உள்ளனர். தொடர்ச்சியாக இரண்டு பருவங்களாக உரப் பற்றாக்குறையால், பயிர்ச்செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டதுடன், பெரும்பாலான விவசாயிகள், தமது உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை நிறைவேற்றுவதற்காக எதிர்மறையான பயிர்ச்செய்கை உபாயங்களை (அடகு வைத்தல், கடன் வாங்குதல், சேமிப்பில் கைவைத்தல்) நாடினர்.

அத்தகைய எதிர்மறை எதிர்கொள்ளல் உபாயங்களை தடுப்பதற்கு, 0.4 ஹெக்டேயர்களுக்கு குறைவான அல்லது சமமான அளவு காணியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும், அடையாளம் காணப்பட்ட சிறுவிவசாயிகளில் இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய சுமார் 50,000 பேருக்கு, எதிர்வரும் போகத்தில் அவர்களது உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை வலுப்படுத்துவதற்கு பணப் பரிமாற்றங்கள் வழங்கப்படும்.

இந்த அறிவிப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான FAO பிரதிநிதி விமலேந்திர ஷரண், நாட்டின் இயலுமையை, எதிர்வரும் பருவங்களில் விரிவான நெல் உற்பத்தியை நோக்கி பங்களிப்பதற்கு குறிப்பாக இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய விவசாயிகளின் இயலுமையை வலுப்படுத்துவதற்கு தக்க சமயத்திலான, பரந்த பங்களிப்புக்காக அமெரிக்காவுக்கு நன்றி தெரிவித்தார்.

"USAIDஇனால் வழங்கப்பட்ட உதவியின் ஊடாக, எதிர்வரும் பயிர்ச்செய்கை போகங்கள் பாதிக்கப்படாதிருப்பதனை உறுதி செய்வதன் மூலம், இலங்கையில் உணவு பாதுகாப்பினை FAOஇனால் வலுப்படுத்த முடியும். அத்துடன், தற்போதைய நெருக்கடியின் மோசமான விளைவுகளால் இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய சிறு விவசாயிகளைப் பாதுகாக்க முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

# செலான் வங்கி இலகு கொடுப்பனவு திட்டங்களை செயற்படுத்தல்

ஒன்லைன் கொடுப்பனவு app ஆன Koko உடன் செலான் வங்கி கைகோர்த்திருந்தது. அதனூடாக, அதன் அட்டைதாரர்களுக்கு ஒன்லைன் மற்றும் விற்பனை நிலையங்களில் பரந்தளவு அனுகூலங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது. செலான் டெபிட் மற்றும் கிரெடிட் அட்டைதாரர்களுக்கு விலைக்கழிவுகள் கிடைப்பதுடன், 3 மாத இலகு தவணைமுறை மீளச் செலுத்தும் வசதி மற்றும் 0% வட்டியில்லாத மீளக் கொடுப்பனவு போன்றவற்றை Koko ஊடாக செலான் அட்டையை பயன்படுத்தும் போது பெற்றுக் கொள்ள முடியும்.



கசுன் டிகொஸ்தா



ருச்சித் லியனகே

செலான் டெபிட் கார்ட்தாரர்களுக்கு Koko app ஐ டவுன்லோட் செய்து கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள ஆரம்பிக்கையில் ரூ. 5,000க்கு மேற்பட்ட கட்டணப் பட்டியல்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது ஆகக்கூடியது ரூ. 1,000 வரை விலைக்கழிவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரத்தியேகமான சலுகை 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை வழங்கப்படும். KOKO ஐ பயன்படுத்தும் விசேட அம்சம் யாதெனில், டெபிட் மற்றும் கிரெடிட் கார்ட்தாரர்களுக்கு இது செயற்படுத்தப்பட்டு உள்ளதுடன், மொத்தத் தொகையை எவ்விதமான வட்டிக் கட்டணமுமின்றி மூன்று தவணைகளாக பிரித்துக் கொள்ளலாம்.

Koko உடன் பதிவு செய்து கொண்டுள்ள பரந்தளவு விற்பனையாளர்கள், செலான் வாடிக்கையாளர்களுக்கு ஒன்லைன் மற்றும் நேரடி விற்பனை நிலையங்களிலிருந்து தமக்கு பிடித்த விற்பனைப் பகுதியை தெரிவு செய்து கொள்ளும் வசதி வழங்கப்படுகின்றது.

செலான் அட்டைதாரர்களுக்கு தமது அட்டையை பயன்படுத்தி சொப்பிங் செய்கையில் மற்றும் ஒன்லைனில் அல்லது நேரடி விற்பனைப் பகுதிகளான Simplytek, Life Mobile, Fitness Island, Spa Ceylon மற்றும் முன்னணி உணவகங்களான Barista, Arthurs Pizza, Cafe Kumbuk, Acropol, English Cake factory போன்ற பலவற்றில் Koko ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது அவர்களுக்கு எளிமைப்படுத்தப்பட்ட தீர்வை வழங்குவதாக அமைந்துள்ளது. இந்தச் சலுகைகள் மற்றும் கொடுப்பனவுத்திட்டங்கள் போன்றன Mimosa, Nanotek Computers, Supplement Factory, Beverly Street, Spring & Summer, Exclusive Lines போன்றவற்றில் சொப்பிங்கில் ஈடுபடுவோருக்கும் வழங்கப்படுகின்றன. வாடிக்கையாளர்களுக்கு விரைவில் தற்போது பிரயாணம் செய்து, காலப்போக்கில் கொடுப்பனவை மேற்கொள்ளும் வசதியும் அறிமுகம் செய்யப்படும். இதற்காக இலங்கையின் முன்னணி புகழ்பெற்ற ஹோட்டல் தொடர்கள் மற்றும் சுற்றுலாப் பகுதிகள் போன்றன அடுத்த சில மாதங்களில் உள்வாங்கப்படும்.

செலான் வங்கியின் அட்டைகள் பிரிவின் தலைமை அதிகாரி ருச்சித் லியனகே கருத்துத் தெரிவிக்கையில், "Koko போன்ற கொடுப்பனவு appகளை பயன்படுத்தும் போது எமது வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறு மட்டங்களில் சொப்பிங் செய்யும் அனுகூலம் கிடைக்கும். ஒன்லைனில் சொப்பிங் செய்வது என்பது இன்றைய காலகட்டத்தில் அனைவருக்கும் அனுகூலமளிப்பதாக அமைந்துள்ளது. மிக முக்கியமாக, தவணை முறையில் மீளச் செலுத்தும் வசதி காணப்படுவதால், வாடிக்கையாளர்கள் தமக்கு அவசியமான பொருட்களை கொள்வனவு செய்து கொள்ள முடிவதுடன், அதற்கு செலான் கார்ட்கள் மற்றும் Koko ஆகியன ஆதரவளிக்கின்றன. பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எமது வாடிக்கையாளர்களுக்கு வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்வதற்கு வழிமுறைகளை வழங்குவதில் செலான் வங்கியைச் சேர்ந்த நாம் அதிகளவு கவனம் செலுத்துகின்றோம். இதனை செயற்படுத்தும் பல பங்காண்மைகளை நாம் ஏற்படுத்தியுள்ளதுடன், அவ்வாறான பங்காண்மைகளில் ஒன்றாக Koko அமைந்திருப்பதுடன், செலான் அட்டைதாரர்களுக்கு பெருமளவில் அனுகூலமளிப்பதாக அமைந்திருக்கும்" என்றார்.

Koko இன் விஸ்தரிப்பு தலைமை அதிகாரி கசுன் டிகொஸ்தா கருத்துத் தெரிவிக்கையில், "சொப்பிங் செய்பவருக்கு Koko இன் 'Buy Now Pay Later' வசதி என்பது சௌகரியமான கொடுப்பனவுத் தெரிவாக அமைந்துள்ளதுடன், சிறந்த தீர்வாகவும் அமைந்துள்ளது" என்றார்.

அத்தியாவசிய அட்டை எனும் வகையில், அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு எப்போதும் உடனிருக்கும். வாடிக்கையாளரின் போக்கை பரிபூரணமாக புரிந்து கொண்டு, தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு கொடுப்பனவுகள், சொப்பிங் மேற்கொள்வதற்கு Koko மேலும் வசதியளிப்பதாக அமைந்திருப்பதுடன், சௌகரியம், அணுகும் திறன் மற்றும் சௌகரியமான கொடுப்பனவு முறைகளை வழங்கும் வகையில் அமைந்திருக்கும்.

பிரான்ஸ்

ஈபிள் கோபுரத்தின் மின் விளக்குகளை

# அணைக்க முடிவு

பிரான்ஸின் தலைநகரான பாரிசில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஈபிள் கோபுரம், ஒவ்வொரு நாளும் இரவில் மின்னொளியில் ஜொலிக்கிறது.

20,000க்கும் மேற்பட்ட ஒளிரும் மின் விளக்குகளால் கோபுரம் ஒளிர்கிறது. உள்ளூர் நேரப்படி நள்ளிரவு ஒரு மணி வரை ஈபிள் கோபுரத்தில் மின்விளக்குள் ஒளிரும். அதன்பிறகு மின் விளக்குகள் அணைக்கப்படும்.

இந்நிலையில் உக்ரேன் போர் காரணமாக ரஷ்யா, ஐரோப்பிய நாடுகளுக்கு எரிவாயு விநியோகத்தை நிறுத்தி வைத்துள்ளதால், பிரான்ஸ் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் மின்சார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.



இதனை கருத்தில் கொண்டு மின்சாரத்தை சேமிக்கும் விதமாக, ஈபிள் கோபுரத்தின் மின்விளக்குகளை முன்கூட்டியே அணைக்க பாரிஸ் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

அதன்படி வருகிற 23ஆம் திகதி முதல், உள்ளூர் நேரப்படி இரவு 11.45 மணிக்கு ஈபிள் கோபுரத்தின் மின் விளக்குகள் அணைக்கப்படும் என அந்த நகரின் மேயர் அன்னே ஹிடால்கோ கூறியுள்ளார்.

அதுமட்டும் இன்றி பாரிஸில் உள்ள பொதுகட்டடங்களில் இரவு 10 மணிக்கு மின் விளக்குகள் அணைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜோர்டான்

அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்ததில்

# 5 பேர் உயிரிழப்பு

ஜோர்டானில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் இடிந்து விழுந்ததில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.



ஜோர்டானின் தலைநகர் அம்மானில் உள்ள நான்கு மாடிகளைக் கொண்ட குடியிருப்பு கட்டடமே நேற்று முன்தினம் (14)மாலை திடீரென இடிந்து விழுந்தது.

இவ்விபத்தில் 25 பேர் இடிபாடுகளில் சிக்கியிருந்த நிலையில், அவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், இதுவரை ஐந்து பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. எனினும் அவர்களை பத்திரமாக மீட்பதற்கான முயற்சியில் மீட்பு குழுவினர் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளனர்.




கட்டார்

# பஸ்ஸுக்குள் வைத்து பூட்டப்பட்ட சிறுமி உயிரிழப்பு

கட்டாரில் பாடசாலை பஸ்ஸொன்றுக்குள் வைத்து தவறுதலாக பூட்டப்பட்ட சிறுமி உயிர் இழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கட்டாரில் பணிபுரிந்து வரும் கேரளாவைச் சேர்ந்த அபிலாஷ் சாக்கோ சௌமியா தம்பதியினரின் மகளான மின்ஸா மரியம் என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நான்கு வயதான குறித்த சிறுமி கடந்த 11 ஆம் திகதி காலையில் பஸ்ஸில் பாடசாலைக்குச் சென்றுள்ளார். செல்லும் வழியில் பஸ்ஸிலேயே ஆழ்ந்து உறங்கியுள்ளார். பாடசாலை வந்ததும் ஏனைய மாணவ மாணவிகள் இறங்கிய நிலையில் அவர் பஸ்ஸில் உறங்கிக் கொண்டிருப்பதை கவனிக்காத பஸ் சாரதி பஸ்ஸின் கதவுகளை மூடிவிட்டுச் சென்றுள்ளார்.

இந்நிலையில் பாடசாலை நேரம் முடிவடைந்து மீண்டும் குறித்த பஸ் திறக்கப்பட்ட நிலையில் அங்கு அச்சிறுமி மயக்கமடைந்த நிலையில் இருப்பதைக்கண்டு அதிர்ச்சியடைந்த பாடசாலை ஊழியர்கள் உடனடியாக அவரை வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த நிலையில் பஸ் கதவுகளை அடைத்ததால் அதிக வெப்பம் மற்றும் மூச்சு திணறல் ஏற்பட்டு சிறுமி உயிர் இழந்துள்ளார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்படும் என கட்டார் கல்வி அமைச்சகம் கூறியுள்ளது.

பிரித்தானியா

எலிசபெத் ராணியின் மறைவு:

# அமோகமாக நடைபெறும் பூக்கள் விற்பனை



பிரித்தானியாவின் ராணியாக 70 ஆண்டுகளுக்கும் கூடுதலாக ஆட்சி செய்த ராணி இரண்டாம் எலிசபெத் கடந்த 8 ஆம் திகதி உடல்நல குறைவால் சிகிச்சை பலனின்றி காலமானார்.

இதனையடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் ராணி எலிசபெத்துக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக பக்கிங்ஹாம் அரண்மனை முன்பு அட்டைகள், பூக்கள், பொம்மைகளை வைத்து வருகின்றனர்.

இந்நிலையில் ராணி இறந்ததால் மலர் விற்பனை பரபரப்பாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் இது குறித்து பிரிட்டிஷ் பூக்கடை சங்கம் கூறியதாவது: ராணியின் விருப்பமான மலரான வெள்ளை அல்லி மலர்களின் தேவை அதிக அளவில் இருப்பதாகவும் 1997 ஆம் ஆண்டு டயானா இறந்த போது பக்கிங்ஹாம், பென்சிங்டன் அரண்மனைகளில் கிட்டத்தட்ட 600 மில்லியன் பூங்கொத்துகள் மொத்தமாக வைக்கப்பட்டிருந்தன என்றும் அதேபோல் தற்போது ராணியின் இறுதிச்சடங்கிலும் பூக்கள் அதிகளவில் இருந்தது எனவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.



பாகிஸ்தான்

# தூய்மை பணியாளரை திருமணம் செய்த வைத்தியர்

பாகிஸ்தானின் ஒகாரா மாநிலத்திலுள்ள திபால்பூரில் வசித்து வரும் கிஷ்வர் சாஹீபா என்ற வைத்தியர், தான் பணியாற்றி வரும் வைத்தியசாலையில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரியும் ஷசாத் என்பவரைக் காதலித்து திருமணம் செய்துள்ளார்.

இது குறித்து கிஷ்வர் சாஹிபா கூறியதாவது: "ஷசாத்தை முதன்முதலில் சந்தித்தபோது, அவர் ஒரு சுகாதாரப் பணியாளராகத் தோன்றவில்லை. அவர் சொந்தமாகத் தொழில் செய்து வருவதையும் எளிமையாக இருப்பதையும் அறிந்து ஆச்சரியப்பட்டேன். ஷசாத்துடன் அற்புதமான திருமணவாய்ப்பை இழக்க விரும்பாததால் நான் ஷசாத்திடம் காதலை வெளிப்படுத்தினேன். நாளடைவில் எனது காதலை ஏற்றுக் கொண்டார்" என்றார்.

அமெரிக்கா

பூனைக்காக இப்படியா செய்வது?

# வியப்பூட்டும் தம்பதி

அமெரிக்காவின் வின்கான்சின் என்னும் பகுதியை அடுத்த மேனோமோனி ஃபால்ஸ் என்கிற பகுதியைச் சேர்ந்த கணவன், மனைவி இருவரும் பூனைகள் மீது மிகவும் அன்பு கொண்டவர்கள்.

இத்தம்பதியினர் பூனைமீது கொண்ட அளவு கடந்த அன்பால், தமது வீட்டை 2020ஆம் ஆண்டு பூனை அருங்காட்சியகமாக மாற்றியிருந்தனர். ஆரம்பத்தில், மொத்தம் 4000 பூனை உருவங்களை அவர்கள் வீட்டில் பார்வைக்காக வைத்துள்ளனர்.

கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்பாக, மேலும் 3,000 பூனை உருவங்களை தங்கள் வீட்டின் அருங்காட்சியகத்தில் சேர்த்துள்ளனர்.
மேலும், இவர்கள் 8 பூனைகளையும் வளர்த்து வருகின்றனர்.
இந்நிலையில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை, மக்கள் இந்த அருங்காட்சியகத்தை பார்வையிடலாம் எனவும், இந்த இடத்தை ஒரு கோப்பி கடையாக மாற்ற விரும்புவதாகவும் இங்கே கோப்பி குடிக்க வருவபவர்கள், தங்களின் பூனையை கூட கொண்டு வரலாம் எனவும் அத் தம்பதியினர் தெரிவித்துள்ளனர்.



இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத்துக்கான

# மேற்கிந்தியத் தீவுகள் குழாமில் ரஸல், நரைன் இல்லை



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் குழாமில் சகலதுறைவீரர்கள் அன்ட்ரே ரஸல், சுனில் நரைன், பேபியன் அலென் ஆகியோர் இடம்பெறவில்லை.

இந்நிலையில், அண்மைய மேற்கிந்தியத் தீவுகள் தொடர்களில் உடற்றகுதி காரணமாக குழாமில் இடம்பிடித்திருக்காத ஆரம்பத் துடுப்பாட்டவீரர் எவின் லூயிஸ் மீண்டும் குழாமுக்குத் திரும்பியுள்ளார்.

குழாம்: நிக்கலஸ் பூரான் (அணித்தலைவர்), றொவ்மன் பவல் (உப அணித்தலைவர்), யனிக் கரியாஹ், ஜோன்ஸன் சார்ள்ஸ், ஷெல்டன் கோட்ரல், ஷிம்ரோன் ஹெட்மயர், ஜேஸன் ஹோல்டர், அகீல் ஹொஸைன், அல்ஸாரி ஜோசப், பிரண்டன் கிங், எவின் லூயிஸ், கைல் மேயர்ஸ், ஒபெட் மக்கோய், றேமன் றீஃபயர், ஒடியன் ஸ்மித்.



சிநேகபூர்வ கிரிக்கெட் தொடரில்

# சம்பியனான பவர் பிளயர் அணி

■ எம்.என்.எம். அப்ராஸ், யூ.கே. காலித்தீன்

சிநேகபூர்வ இருபதுக்கு - 10 கிரிக்கெட் கிண்ணத் தொடரில் பவர் பிளயர் அணி சம்பியனானது.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பவர் பிளாஸ்டர் 89/91 அணியை வீழ்த்தியே பவர் பிளயர் சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பவர் பிளயர் அணியின் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பவர் பிளயர் அணி 10 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், நசீர்கான் ஆட்டமிழக்காது 34, நஸ்வி 20, தாரிக் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஐயூப்கான், சக்கூர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றியதோடு, ஜிப்ரி, இஸ்ஸடீன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு, 113 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பவர் விளாஸ்டர் அணி ஏழு ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 35 ஓட்டங்களையே பெற்று 78 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், அப்துல் மஜீட் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில், அஜ்மல், ஜெளஸி, கடாபி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியதோடு, சிராஜ், தாரிக், நசீர்கான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இத்தொடரின் நாயகனாக தாரிக் தெரிவானார்.

சம்பியன்ஸ் லீக்:


# டொட்டமுண்டை வென்றது சிற்றி

சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஜேர்மனிய புண்டெஸ்லிகா கழகமான பொரூசியா டொட்டமுண்டுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி வென்றது.

சிற்றி சார்பாக, ஜோன் ஸ்டோன்ஸ், எர்லிங்ஹ் ஹலான்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜூட் பெல்லிங்ஹாம் பெற்றிருந்தார்.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற போர்த்துக்கல் கழகமான பெய்பிக்காவுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற ஒஸ்திரியக் கழகமான ஆர்.பி ஸல்ஸ்பேர்க்குடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி சமப்படுத்தியிருந்தது.



# வடமாகாண ஹொக்கி சம்பியனானது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

■ எஸ். நிதர்ஷன்

வட மாகாண-பாடசாலைகளுக்கு இடையிலான ஹொக்கி போட்டிகள், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றன.

இதன்போது 20 வயதுக்குட்பட்ட அணியில் வட மாகாண ரீதியாக தகுதிபெற்ற ஒன்பது அணிகள் போட்டியிட்ட நிலையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 20 வயதுக்குட்பட்ட அணி, வட மாகாண சம்பியனானதோடு, தேசிய மட்டத்துக்கும் தெரிவாகியுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 16 செப்டெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.